184

ஜகன்மோகினி

ஆசிரியை

வை. மு. கோதைநாயகி அம்மாள்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - APR 1937
MADRAS

184

3L
ஊ211, N22 3M
N36.13.9
182992

[illegible] ருஷ சந்தா ரூ 1/8 [illegible] னி காபி [illegible]

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

மலர் 13 இதழ் 9

ஜகன்மோகினி

ஆசிரியை : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

13-வது ஆண்டு ஆரம்பம்	மாதாந்த நாவல் சஞ்சிகை.	ஜனவரி 1936

ஆங்கில மாதம் முதல் தேதியன்று வெளி வரும்.

எல்லா பத்திரிகை விற்போரிடமும் கிடைக்கும்.

வருஷ சந்தா ரூ. 1-8	ஜீவிய சந்தா ரூ. 25	தனிப் பிரதி அணா 2

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்.

இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

பங்கு 1 நளினசேகரன் வீரவஸந்தா 3 வைரங்கள் படாடோபத்தின் பரிபவம் பிச்சைக்காரக் குடும்பம்	இனாமாக நாவல்கள் வேண்டுமா ?	பங்கு 2 பரிமளகேசவன் உத்தமசீலன் கதம்பமாலை சுகந்தபுஷ்பம் கோபாலரத்னம் புத்தியே புதையல்
பங்கு 3 கௌரீமுகுந்தன் ஸாரமதி சோதனையின் கொடுமை	எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன்பணமனுப்புகிறீர்களோ, அத்தனாவது நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில்	பங்கு 4 தியாகக்கொடி நவநீதகிருஷ்ணன் சாமளநாதன் ருக்மிணீகாந்தன் மங்களபாரதி
பங்கு 5 வைதேகி பத்மசுந்தரன் ராதாமணி காதலின் கனி சாருலோசனா	ஒன்று இனாம்	மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

"ஜகன்மோகினி ஆபீஸ்" திருவல்லிக்கேணி

அடுத்த (10-வது) இதழுக்குள்
வெளி வரும்

ஓரே ரூபாய் முன்பணமனுப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

3 - APR 193
MADRAS

அனாதைப்பெண்ணை அரவங்களும் தீண்டவில்லை. ஏன்? உலகச் சுழலில் இன்னும் உழல வேண்டுமே! ....

டாக்கிக் கேற்ற முறையில் புதிதாக ஒரு நாவல் எழுத வேண்டுமென்று அநேகர் கேட்டுக்கொண்டதால், இந்த நாவல் புதிய வழியில் எழுதப்பட்டு, படிக்கும் போதே ஒவ்வொரு சம்பவமும் கண்ணெதிரில் தோன்றுவது போன்று அமைக்கப்பட்டுள்ளது. பல அழகிய படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதிலுள்ள அத்யாயங்களின் அட்டவணையைப் படிக்கும்போதே இதன் பெருமை உங்களுக்குத் தெரியும்.

அட்டவணை

1. பரதேசிப் பெண்ணின் பரிதவிப்பு.
2. ஆதிகால சரிதை—நாதியற்ற வனிதை.
3. அதிகாரத் தாண்டவம்—விதி செய்யும் வைபவம்.
4. பேதைப் பெண்ணின் சோதனைக் கூற்று.
5. இன்ப அருணோதயம்—துன்ப சூரியோதயம்.
6. இளைத்தவர் தலையில் ஏறும் பேனும்.
7. சந்தையில் தோன்றிய விந்தையான சம்பவம்,

8. புகழ்மாலை வீரனின் புனிதமான காதல்.
9. பிறவியின் நிழலைப் பிரித்திடல் கூடுமோ?
10. நொந்த மனத்தில் வெந்தழல் மூண்டது.
11. அன்பிற்கு முன்பு அனைத்தும் த்ருணமே.
12. கனிந்த காதலரின் கண்ணீர்ப் பெருக்கு.
13. ஆச்சரியம் அதியாச்சரியம்.
14. உத்தம மனைவியின் உயரிய தியாகம்.
15. கவலை நீங்கிய காளையின் களிப்பு.
16. அன்புக் கூண்டில் இன்பக் கிளிகள்.

பல வருஷங்களாகக் கைவசமில்லாது இப்பொழுதே
அச்சாகி வெளிவந்துள்ள அற்புதமான

மூன்று நாவல்கள்

காதலின் கனி (2-ம் பதிப்பு) விலை ரூ. 2-8,

இப்பெயருக்கேற்றவாறு ஒப்புயர்வற்ற காதல் ரசமும் அடங்காப் பிடாரியான மனைவியிடம் அகப்பட்டுக் கொண்டு சாதுவான புருஷன் படும் பாடும், குடுகுடுப்பாண்டி, மந்திரவாதி முதலியவர்களிடம் பாமர ஜனங்கள் அகப்பட்டுக் கொள்வதும் புதையல் எடுக்கும் விநோதமும், புதுமாதிரியான வழியில் துப்பறியும் ஆச்சரியமும் நிறைந்தது.

சாருலோசனா (3-ம் பதிப்பு) விலை. ரூ. 2-8

உண்மைக் காதலின் மகிமையை யறியாது பேராசைப் பிடித்த கிழவர்களுக்கு பண ஆசையினால் தம் மக்களைக் கொடுத்துப் பெற்றோர்கள் அடையும் பாபமும், பெண்மக்கள் படித்த திமிரினால் கட்டிய கணவனை மதியாது தலைகால் தெரியாமல் சுயேச்சையாகக் கெட்டழிந்து பரிபவப்படுவதும், இன்னும் மனத்தை யுருக்கும் சம்பவங்களும் நிறைந்த, சமூக சூழல்களை விளக்கிக் காட்டும் அதியற்புதமான நாவல்.

ராதாமணி (3-ம் பதிப்பு) விலை ரூ. 2-8

கணவனின் நிழல் போலுள்ள உத்தம மனைவியின் வாழ்க்கையும், உயர்ந்த காதலர்களின் மாட்சியும், விலைமகளாகப் பிறந்தும் விலையற்ற குணத்தினால் பெருமையுற்று விளங்கும் அம்புஜத்தின் அருமையான ஜீவியமும், விலைமகளின் லீலையால் அன்யோன்ய தம்பதிகளின் சிதறலும், நேரில் விஷயமறியாது பிறர் சொல்லைக் கேட்டுச் சந்தேகிப்பதால் விளையும் தீமையும், இன்னும் அளவிலாத அநேக சாரங்களைக் கொண்ட துப்பறியும் நாவல்.

ரூ 5 முன்பணமனுப்பினால்
மூன்று நாவல்களையும் அனுப்புகிறோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ் திருவல்லிக்கேணி, சென்னை.

காதலின் கனி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

பத்திரிகை உலகில்
இதுவரை நடைபெறாத சம்பவம்!
எமது நன்றியறிதல்

சந்தா நேயர்கள்
தயவு செய்து
கவனமாகப் படிக்கவும்

நமது "ஜகன்மோகினி" யை ஐந்து வருஷங்கள் தொடர்ச்சியாக ஆதரிக்கும் சந்தா நேயர்களுக்கு எமது நன்றியறிதலின் ஞாபகார்த்தமாக

ரூ. 2 - பெறுமான
எமது நாவல்களை முற்றிலும் இனமாக
அளிக்கத் தீர்மானித்துள்ளோம்

இம்மாதிரியே இனிமேல் ஒவ்வொரு ஆண்டிலும் அளிக்க ஏற்பாடு செய்துள்ளதால், நமது நேயர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் சந்தாதாரர்களாக இருப்பதன் அநுகூலத்தை அறிவார்களென்று நம்புகிறோம்.

10-வதாண்டு முதல் (காதலின் கனி ஆரம்பத்திலிருந்து) இந்த நான்கு வருடங்களாகச் சந்தாதாரராயிருப்பவர்கள், அடுத்த ஆண்டின் சந்தாவை அனுப்பி, 5- வருடங்கள் சேர்ந்தார்ப்போல ஆதரிப்பதுடன், 1935 வரையில் வெளியான நமது நாவல்களில் அவர்களுக்கு வேண்டியதைத் தெரிவித்துப் பெற்றுக்கொள்ளவும்.

சந்தா அனுப்பும் போது
உங்களது சந்தா நம்பரை
அவசியம் எழுதவும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

8-APR 193

டாக்டர் :—ஆம் ; ஆம்: மிஸ்டர் உலகநாதம்! இப்போதுதான் நினைவு வருகிறது. என் பாடு திடீர் என்று அலறிவிட்டது. ஒரு நாளைக்கு எத்தனையோ ஆபரேஷன்கள் நடக்கின்றன. எத்தனையோ புதிய புதிய நோயாளிகள் வருகிறார்கள். எனக்கு நினைவு இருப்பதே இல்லை. ஏன் சார்! அந்த நோட்டு திருட்டு நோட்டு என்கிறீர்களே அது அவனிடம் எப்படி வந்தது?......

உலக :—மன்னிக்க வேண்டும். என் வேலை யாகிவிட்டது. விவரம் இப்போது வெளியிட முடியாது. ச்ரமம் கொடுத்து விட்டதற்கு மீண்டும் மன்னிக்க வேண்டும்—என்று கூறி விடை பெற்றுக் கொண்டு சென்று விட்டார்.

அன்றைய காலையிலேயே இன்னொரு நூறு ரூபாய் நோட்டு வேறு ஒரு பாங்கியில் ஒரு பெரிய செட்டியாரின் கணக்கில் வந்திருக்கும் தகவல் உலகநாதனுக்கு எட்டிய உடனே அவர் செட்டியார் கடைக்குச் சென்றார்.

அவ்வளவுதான் உலகநாதனைப் பார்த்த உடனே செட்டியாரின் கண்கள் சுழலமிடுகின்றன. விலுவிலென்று உதறல் எடுத்துக் கொண்டது. நாக்குழற......"வாங்க......வாங்க.........இப்படி ஒக்காருங்க. என்ன சாமான் வேணுங்க......என்ன சமாச்சாரங்க?" என்றார்.

உலக :—செட்டியாரே! எனக்கு ஒரு சாமானும் வேண்டாம். உம்மோடு ஒரு முக்யமான விஷயத்தைப் பற்றி பேச வந்தேன். அதாவது,—இன்று காலையில் நீர் பாங்கிக்கு எத்தனை ரூபாய்கள் உமது கணக்கில் அனுப்பினீர்?

செட்டி :—(பயந்து நடுங்கி) ஐயா! காலை முதல் இரவு வரையில் இங்கு உட்கார்ந்து கஷ்டப்பட்டு சம்பாதித்த சொத்து கொஞ்சந்தானுங்க. இப்பல்லாம் முன் போல வருமானமே இல்லை. மொளக்காயா தூளா வாங்கிப்புட்றாங்க. சீக்காயா! தூளா வாங்கிப்புடுறாங்க. அல்லாம் தலை கிழாப்பூடுது. என்ன செய்வேன்? வியாபாரமே மந்தம். என் சின்ன மகன் சிங்காரச் செட்டியாருக்குக் கல்யாணமாகணும். என் மூணாவது பெண் முத்து லக்ஷ்மிக்குக் கல்

யாணமாகணும். பணமோ கையிலில்லை. கொடுக்க வேண்டிய பாவி களோ—நான் தர்மத்திற்கு அஞ்சி தம்பிடிக்கு தம்பிடி வட்டித்தான் வாங்கறேன்—அதையும் சரியாய் கொடுப்பதில்லை.

உலக :—உஸ்..........போதும் நிறுத்துமய்யா! உம்முடைய குடும்ப கதையும் ராமாயணமும் எனக்கு வேண்டாம். நான் உம் மிடம் கடன் கேட்க வரவில்லை. நீர் இன்று காலையில் கட்டிய தொகையை சொல்லுமையா.........

செட்டி :—ஐயா! ஒரு நூறு ரூபா நோட்டு. 4—10 ரூபா நோட்டு. 10-5 ரூபா நோட்டு. இதுதான் சாமி நான் அனுப்பினேன். ஏன் கேக்கிறீங்க?

உலக :—செட்டியாரே! அந்த நோட்டுகளுக்கு நம்பர் உமக்குத் தெரியுமா!

செட்டி :—ஆகா! நான் அப்படி கண்ணு மூடி காரியஞ்சேய மாட்டேன் சாமி. எங்கப்பன் புட்டண்ணச் செட்டியார் இலேசு பட்டவரல்ல. அவர் எனக்கு விஷயங்கள் எல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கிறுரு. 'அடே பையா! நோட்டு உன்னிடம் வந்தால் அதை சும்மா பெட்டியில் வைக்காதேடா! நம்பரெ மொதல்லெ எழுதிக்கோடா. நோட்டு திருட்டுப் போனாலும் புடிச்சுப்புட லாண்டா!'' என்று சொல்லுவாருங்க. இதோ பாருங்க, நோட்டுக் களின் நம்பர்—என்று காட்டினார்.

உலக :—செட்டியாரே! இதோ இந்த நூறு ரூபாய் நோட்டு தர்மலிங்கம் ப்ரபுவின் வீட்டில் சனிக்கிழமை இரவு திருடு போய் விட்ட நோட்டு. இந்த திருட்டு நோட்டு உம்முடைய கணக்கில் எப் படி ஐயா வந்தது?.......

என்று முடிப்பதற்குள், செட்டியார் நெருப்பை மிதித்தவர் போல அலறி "ஐயயோ! யம்மாடீ! யப்பாடீ!......இதென்ன அனி யாயம்! நானு தருமலிங்கத்தின் வீட்டில் திருடி விட்டேன். அட எழவே.....நானு உப்பு வித்து சேத்த பணமாச்சே......நானு பருப்பு வித்து சேத்த பணமாச்சே......நானு கஷ்டப்பட்டு சேத்த பண

மாச்சே !.......என்று பெரிய குரல் பாய்ச்சி ஒப்பாறி வைக்க வாரம் பித்து விட்டார்.

உலக :—(அடக்க மாட்டாது நகைப்பை அடக்கிக் கொண்டு) ஐயா! செட்டியாரே! ஏன் இப்படி அலறி யடித்துக் கொண்டு அழுகிறீர்? உம்மிடம் இந்த நோட்டு எப்படி வந்தது என்றுதானே நான் கேட்கிறேன். விவரத்தைச் சொல்லுமே.

செட்டி :—ஐயயோ தேவுடா! இதேமி க்ரகசாரமுரா !......... நாதலராதனு இட்ள ஒச்சிந்தி.........ஐயா! அடுத்த தெருவிலிருக்கும் கறிகாய் வித்து வந்த கல்யாணியம்மா மவன் மோஹன் இருக்கிறான். அவன் முந்தா நாள் காலையில் இந்த நோட்டுக்குப் பணங் கேட்டான். அதை வாங்கிக் கொண்டு பணம் கொடுத்தேன். கடவுள் மீது ஆணையாய் இதுதான் சாமி விஷயம்.

உலக :—செட்டியாரே! மோஹன்தான் மாத்தினன் என்று திட்டமாய் எப்படி நம்புவது.?

செட்டி :—ஐயயோ ! பகவந்துடா ! ஐயா! நான் 10 நோட்டுகள் 10 ரூபாய் நோட்டுக்களாகவே கொடுத்தேன். அந்த பத்து நோட்டின் நம்பரும் இதோ பாருங்கள்...என்று கண்ணில் நீர் பெருகத் தடுமாறி திகில் பிடித்துப்போய் கூறினர்.

உலகநாதன் அந்த 10 நம்பர்களேயும் குறித்துக் கொண்டு "செட்டியாரே ! பயப்படாதேயும். நான் சென்று வருகிறேன்; ஏதேனும் விஷயமிருப்பின் பிறகு வருகிறேன்." என்று கூறிப் போய் விட்டார்.

நேரே ஸ்டேஷனுக்குச் சென்று விவரங்களே எல்லாம் குறித்துக் கொண்ட பிறகுதான் நாம் முன்னதிகாரத்தில் தெரிவித்தது போன்று, இன்ஸ்பெக்டர் மோஹனிடம் வந்து அவனேக் கைது செய்தார்.

உலகத்தில் மனிதர்கள் எத்தனை தைரியசாலிகளாயும் அஞ்சா நெஞ்சுடையவர்களாயும் இருந்த போதிலும் அவர்களும் நடுங்கி தம் தைரிய மிழந்து தபிக்கும் சமயத்தை அவர்கள் வாழ்க்கையில், எப்

படியாவது கடவுள் காட்டாது இருப்பதில்லை. அங்ஙன மிருக்க, நமது இளம் வாலிபன் மோஹன் சதா வறுமையினாலும் விசனத்தினாலும் வாடி வதங்கி தாயின் பக்கலில் புலம்பிக் கொண்டிருக்கையில் “நீ குற்றவாளி உன்னைக் கைது செய்து விட்டேன்” என்று கூறக் கேட்டதும் அவன் இடிந்துப் போய் விட்டது வியப்பா !

அவன் ஏதோ விபத்து நடந்ததாக எண்ணினானே யன்றி தன் தலைக்கே தீம்பு, தர்மப்ரபுவாகிய தர்மலிங்கத்தையே கொலை செய்து விட்டதான பெரும் பழி வந்து சாரும் என்று கனவிலும் கருத வில்லை யாதலால் இம்மொழி அவனுடைய உயிரையே பெரும் பாகமும் வாங்கி விட்டதென்றே கூறலாம்.

ஹா வென்று அலறி பூமியில் விழுந்த மோஹனுக்கு வெகு நேரம் ப்ரக்ஞையே உண்டாக வில்லை. அன்று ராஜத்தினிடம் பேசிய அதே இன்ஸ்பெக்டர் ஏகாம்பரமே இன்று கூட கைதியாக்க வந்திருப்பதால் மோஹனின் சோகமும், அவனுடைய நிலைமையும் அவரையும் ப்ரமிக்கச் செய்தன. ஆனால் என்ன செய்ய முடியும்? சட்டத்தையும், உத்யோகத்தின் தோரணையையும் அவர் வகித்தே தீரவேண்டுமல்லவா ?

அவர் ராஜத்தின் அழுத்தமான மொழிகளை மறக்கவே இல்லை. இயற்கையிலேயே உத்தமமான சுபாவம் கொண்ட ஏகாம்பரத்துக்குப் பல சந்தர்ப்பங்களில் “நாம் ஏன் இந்த கடினமான போலீஸ் உத்யோகத்தை வகித்தோம். ஜீவனம் செய்ய ஏதேனுமொரு சாதாரண உத்யோகம் கிடைத்திருக்கலாகாதா ! என்ன தர்ம சங்கடமாக இருக்கிறது !” என்று வருந்தியதுண்டு. அதே எண்ணம் அவர் மனத்தில் இப்போதும் தோன்றியது.

மோஹனுக்குச் சற்று ஏதோ சிகிச்சை செய்ததும் தன் ஸ்மரணை பெற்று எழுந்தான். மிரள மிரள விழிக்கிறான். ஏகாம்பரத்தை நோக்கி “ஐயா உண்மையில் தர்மலிங்கம் கொல்லப்பட்டு விட்டாரா ! ஐயோ ! நீங்கள் கண்ணால் பார்த்தீர்களா !......அவருடைய அருமைப் புதல்வி......ராஜலக்ஷ்மியம்மாள் எப்படி இருக்கி

ரூர்கள்? அவர்களுடைய உயிர் இருக்கிறதா!........நீங்கள் அந்தம் மாளைப் பார்த்தீர்களா.........

என்று மோஹன் கேட்கும் போது ஏகாம்பரத்தின் இதயத்தில் சுறீர் என்று தாக்கியது. அங்கு வந்த உலகநாதன் ஏகாம்பரத்திற்கு நேர் விரோதப் பட்டவர். அவருக்கு மோஹனைப் பார்க்கும் பொழுதே குற்றவாளி என்று தீர்ப்பு கூறி விட்டதுபோல் தோன்றுகிறது. ஆதலால் அவர் அலக்ஷ்யமாக நோக்கி "போதுமைய்யா உம்முடைய வேஷம். அடே யப்பா! உண்மையில் தர்மலிங்கமா இறந்து விட்டது என்று பேசுவதைப் பார்த்தால் வேறு யாரையோ கொலை செய்ய எண்ணி மாறுட்டமாக தர்மலிங்கத்தைச் செய்து விட்டீரா என்ன?'' என்று குத்தலாகக் கேட்டார்.

இவ்வார்த்தை மோஹனின் உயிரைத் தாக்கியது. "ஹா...... ராம ராமா!.... ஐயா! நான் என் புத்தி அறிந்த நாளாக இது பரியந்தம் பொய் என்பதே கூறி யறியமாட்டேன். நான் செய்தது குற்றமோ! குற்றமில்லையோ அது பகவானுக்கு அர்ப்பணம். நானே இவ்விஷயத்தை நேரில் கூறிவிட எண்ணி இருந்தேன். அதற்குள் தாங்களே வந்து விட்டீர்கள்.

அதாவது,—ஆண்டவன்மீது ஆணையாக இதோ இருக்கும் என் தாயார்மீது ஆணையாக நான் கூறுகிறேன். நான் ஒரு பாபமும் செய்தறிய மாட்டேன். தர்மலிங்கப் ப்ரபு என்னை வேலையிலிருந்து நீக்கியதால் நான் என் விதி அம்மாதிரி அமைந்தது என்று போனேனே யல்லாது அவர் மீது நான் கடுகளவும் கடுமை கொள்ளவில்லை. இது சத்தியம்.

ஐயா! என் தாயாரின் சுகம் ஒன்றையே நான் நாடியதால் ஒரு சிறு குற்றம் செய்தது உண்மையே! அதுவும் நான் தெரிந்து, குற்றம் செய்யவேண்டுமென்று கனவிலும் கருதவில்லை. என்னையறியாது ஸ்வாமி கூட்டி வைத்த ஓர் சோதனையின் பலனாக முடிந்தது.

அதாவது,—என் தாயாருக்குக் கண்ணின் உபாதை அதிகரித்து தத்தளித்து வருந்திய சமயம், நான் முன்பின்னறியா ஓர் கிழவர் வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்து "இதையோர் ப்ரபுவிடம் கொடு. அவர் உதவி செய்வார்'' என்று கூறினர். நான் அதை நம்பி உடனே கடிதத்தை வாங்கிக்கொண்டு என் சிநேகிதனின் ஸைகிளில் இரவு நள்ளிருட்டில் என் தாயின்பொருட்டுச் சென்றேன்.

(நடந்தவைகளைக் கூறி) ஐயா! ஆண்டவன்மீது ஆணையாக நடந்தது இதுதான். நான் அப்போது சற்று தைரியமாய் எதிர்த்திருப்பேனேயாகில் என்னுயிர் போயிருப்பது நிச்சயம். கடவுள் சாக்ஷியாக அந்த வீடு தர்மலிங்கப் ப்ரபுவின் வீடு என்று எனக்குத்

தெரியவே தெரியாது. என்னுடைய நிலைமையின் கொடுமையினல் நான் அவ்வாறு ஓடினேன்.

நான் பணத்தை வாங்கிக்கொண்டது பெருங் குற்றந்தான். ஆனல் நான் அச்சமயம் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. அனுவசியமாய் என்னுயிரைப் பறி கொடுத்திருப்பதுதான் நின்றிருக்கும். அதோடு என் தாயும் உயிர் நீத்திருப்பாள். கேஸும் அமுங்கிப் போயிருக்கும். ஐயா! என் தாயின் உபாதை நீங்கியதும் நேரில் வந்து குற்றத்தை நானே ஒப்புக்கொள்ள ஈசன் சாக்ஷியாகத் தயாராக இருந்தேன். இப்போது என் தாயின் பாதையும் நீங்கிவிட்டது. நடந்த விஷயத்தையும் கூறிவிட்டேன்.'' என்று கண்ணீர் பெருகக் கதறினன்.

உலக:—ஆகா! எத்தனை உத்தம சிகாமணி! அடாடா! நீர் பக்காப் பேர்வழி ஐயா! இத்தனை சாமர்த்தியமாக உம்முடைய கதையை ஜோடித்து வைத்துவிட்டீரே! பேஷ்! பேஷ்! ப்ரேத பரிசோதனை செய்த டாக்டரின் வாக்குமூலமும், நடந்த சன்னிவேசங்களும், இதற்கு முன்பு ஏற்பட்ட சந்தர்ப்பமும் எங்களுக்குப் போதுமான ஆதாரமாகிவிட்டன.

10000 ரூபாயைத் திருடிக்கொண்டு செல்லும் முகமூடிக் கள்ளர்கள் உம்மிடம் 200 ரூபாயை தானம் செய்துவிட்டுத்தான் செல்வார்களோ! என்னய்யா! சொல்வார் சொல்லியபோதிலும் கேட்போர்கள் முட்டாள்களா! அவ்விதம் செய்வதில் அவர்களுக்கு ஆபத்தேயன்றி நன்மை உண்டாகுமா! அவர்கள் உம்மிடம் பணங் கொடுத்துத் தப்பிக்க வேண்டிய அவசியமே இல்லை. இது வெறுங் கட்டுக்கதை......உம்; புறப்படும்......இனிமேல் தாமதிக்க முடியாது'' என்று அதிகாரத்துடன் கூறினர்.

இதைக் கேட்ட கல்யாணியம்மாள் கண்ணில் கட்டோடு "ஹா!...மோஹறன்.. மோஹறன்...இதென்னடா அனியாயம். என்னுயிர் தபிக்கிறதே! நான் என்ன செய்வேன். மோஹறன்...ஐயா!... போலீஸ் அதிகாரிகளே! என் மகனென்று நான் கூறவில்லை. அவன் கால் தூசிகூட இப்படிச் செய்யாது. ஐயா......என் குழந்தையை விட்டுவிடுங்கள்'' என்று கதறுகிறுள்.

மோஹறன், "அம்மா! அம்மா! வீணே வருந்தாதே! என் விதியை நான் துலைக்கிறேன். யார் விதி யாரை விட்டது. அம்மா! மனிதர்களை வேண்டிக்கொள்வதைவிட நம்மைப் படைத்த பரந்தாமனை மனமாற வேண்டிக்கொள்ளு. அவன் என்றுமே நம்மீது கடின சித்தத்துடன் இருக்கமாட்டான். ஒரு வேளையாவது மனமிளகலாம். அம்மா! என்னருமை அம்மா! என்னல் அடையும் பலன் சதா

விசனமும் புலம்பலுந்தான். என் தாயே! தைரியமாக இரு. ஆண்டவனை நம்பி இரு. ஆஸ்பத்திரியிலிருப்போரை நோக்கி "ஐயா! இவ்வனாதைக் கிழவியை சற்று கவனித்துக்கொள்ளுங்கள். நான் நிரபராதி என்றதை கடவுள் விளக்காது போகமாட்டார். அம்மா! அம்மா!...நான் சென்று வருகிறேன்." என்று தாயின்மீது சாய்ந்தும் அவளைத் தழுவியும் கதறினான்...

அக்காட்சி அங்குள்ள இரண்டொரு போலீஸ்காரர்களைத் தவிர மற்றையோரின் மனத்தை உருக்கியது. ஏகாம்பரத்தின் கண்களிலும் சில துளிகள் சிந்தின. அடுத்த விநாடியே மோஹனை அவ்விடம் விட்டு அழைத்துச் சென்றார்கள்.

182492

கல்யாணியம்மாள் "மோஹன்...மோஹன்....என் செல்வா! மோஹன்!" என்று அந்த பலவீனமான நிலைமையிலும் கதறிய

படியே கண்ணின் கட்டோடு படுக்கையிலிருந்து தள்ளாடியபடி எழுந்து, மோஹனின் பின்னாலேயே ஓடிய பரிதாபகரமான காக்ஷியை இதயம் படைத்த யார்தான் கண்டு சகிக்க முடியும்? பெற்ற பாசத்தை விட வளர்த்த பாசம் அபாரமானது என்ற பெரியார் மொழி பொய் யாகுமா......

16-வது அதிகாரம்.

வெந்த புண்ணில்—வேல் பாய்ந்தது

உலகானுபவத்தை மக்கள் அதிகம் அறிந்துகொண்டால் அதனால் ஏற்படும் பலன் ஒரு விதம். அறியாவிட்டால் அதனாலுண்டாகும் பலன் வேறொரு விதம். இரண்டும் இல்லாதோர் அடையும் பலன் பின்னொரு விதம். உலகானுபவத்தை யறியாது தன் போக்காயும் சுகஜீவியாயும் இருந்த நமது சிறுமி ராஜலக்ஷ்மியின் நிலைமை இப்போதுதான் அவள் மனக் கண்ணாடியிலேயே ப்ரதிபிம்பித்துத் தெரிய வாரம்பித்தது.

“நான் இனி ஓர் தனித்த திக்கற்ற பரதேசியாகிவிட்டேன் எனக்குப் பெரும் ஆதரவாக மலைபோலிருந்த பிதாவைப் பறி கொடுத்துவிட்டு இனி உயிருடன் வாழ்வதா! அந்தோ! அவர் இறந்ததற்கழுவேனா! ஒரு பாபமும் அறியாத மோஹன்மீது சந்தேகங்கொண்டு விசாரணைகள் ரகஸியமாக நடத்துவதாகத் தெரி கிறதே, அந்த அனியாயத்திற்கழுவேனா...ஐயோ......என் மூளையே சிதறி விடும்போல விருக்கிறதே......

சங்கரா......சங்கரா......இங்கே வா. வேறு ஏதேனும் சமாச் சாரம் உனக்குத் தெரியுமா! போலீஸார் ஏதோ ரகஸியமாய்த்

தேடுவதாகச் சொன்னார்களே! அது உண்மையா! என்ன சங்கரா இந்த கொலையைப்பற்றி உனக்கு என்ன தோன்றுகின்றது?'' என்று விசனமே வடிவாய்க் கேட்டாள்.

சங்க:—அம்மணீ! விவகாரம் ஒருவாறு முடிந்துவிட்டதென்றே கூறவேண்டும். நான் தங்களிடம் கூறவேண்டாமென்று நினைத்தேன். அந்த கோரக் காட்சியை என் கண்ணாரக் காணும் தலைவிதி யமைந்தது.

தாயே! நிரபராதியும், மகா சாதுவுமான மோஹனனைக் குற்ற வாளி என்று தீர்மானித்து தக்க ஆதாரங்களுடன் கைதியாக்கிக் கொண்டு போய்விட்டார்கள். நான் வேப்பம்பட்டியிலிருந்து வரும் போது ஆஸ்பத்திரியின் வாசலில் அதிகக் கூட்டமாகவிருந்ததால் நானும் சென்று பார்த்தேன்.

அந்தோ! மகா பரிதாபம்! கொடிய சோதனைக் காட்சி என்றே கூறலாம். மோஹனன்தான் குற்றவாளி என்பதற்கு இரண்டு 100 ரூபாய் நோட்டுக்கள் சாக்ஷி கிடைத்துவிட்டதாம். மோஹனின் பரிதாபத்தைப் பார்த்துச் சகிக்கக்கூடவில்லை.

ராஜம் :—(இடை மறுத்து) என்ன ! என்ன ! மோஹனைக் கைது செய்து விட்டார்களா ! நோட்டு சாட்சியகப்பட்டு விட்டதா! ஐயயோ ! அனியாயக் கொள்ளையே! சங்கரா! நான் எந்த இடத்தில் வேண்டுமாயினும் சத்தியம் செய்து மோஹன் நிரபராதி என்று கூறுவேன். மகா பரிசுத்தவான். மகா உத்தமன். அந்தோ! ஒருவன் ஏழை யாகையினாலேயே அவன்மீது இத்தகைய பழியையா சமற்றி விடுவது......அப்புறம் என்ன நடந்தது?

சங்கர :—நடப்பது என்ன விருக்கிறது. அவனுடைய தாயா ருக்குக் கண்ணில் உபாதையாம். அதற்காக பணத்தைக் கொள்ளை யடித்து, பகையினால் ப்ரபுவையும் கொலை செய்து விட்டு.....தன் தாயாருக்கு வைத்தியம் செய்தானாம். கிழவியின் கன்றாவியைக் கண்ட எந்த கல்லும் உருகி விடும். கண்ணில் கட்டுடன்'' ஹா ; மோஹன் ! மோஹன் !''...என்று தள்ளாடியவாறு சகிக்க முடியாத துக்கத்துடன் அவன் பின்னாலேயே கதறியபடி ஓடி வந்தாள்.

அடாடா...அங்குள்ள அத்தனை ஜனங்களும் கண்ணீரை உதிர்த்தார்கள்.

ராஜம்:—(ஹா! க்ருஷ்ணு! க்ருஷ்ணு! என்று காதைப் பொத்திக் கொண்டு மோஹன் என்ன சொன்னர்........அவர் எப்படி சகித்தார்?

சங்க :—அம்மணி! சகிப்பதாவது. அவரைப் பார்த்தால் இதயம் வெடித்து உடனே உயிர் போய்விடுமோ வென்று பயமாகவே இருந்தது. 'அம்மா! அம்மா! இனி மனிதர்களை நம்பாதே! கடவுளையே நம்பு! கடவுளை ப்ராத்தனை செய்து வேண்டு. உன்னை அனுதையாய் விட்டுப் பாவி நான் செல்கிறேன்." என்று அவர் கூறுகையில் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தின் கண்களில் நீர் பெருகியதை நான் கண்ணுல் கண்டேன். நெருப்பில் விழுந்த புழுவெனத் துடித்தவாறு மறைந்து விட்டார். அவருடைய கதறலை என்னுல் பார்க்கவே முடியவில்லை. அவர் கண் முன்பு செல்லவும் எனக்கு வெட்கமாயிருந்தது.

ராஜம் :—அவர் தாயார் என்னவானுள்? அந்தோ! இந்த விஷயத்தைக் கேட்கும் போதே என் மனம் தாங்க வில்லையே! நேரில் பார்க்கையில் எப்படித்தான் சகிப்பது. அடாடா!.......விதியின் கூற்று மட்டு மல்ல.......சத்துருக்களின் சதியின் கூற்றும் சேர்ந்து நெருப்பும் காற்றும் போலாய் விட்டன.

சங்க:—அந்தம்மாள் கதறியபடி ஓடி வருகையில் ஆஸ்பத்திரியிலிருந்த ஒரு நர்ஸ் தடுத்து உள்ளே அழைத்துக்கொண்டு சென்ருள். பின்னர் என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது. இம்மாதிரிதான் இது முடியும் என்று நான் அன்றே தீர்மானித்தேன். தெய்வத்தின் சோதனையும் ஒன்று சேர்ந்தது. என் கண்கள் மழையே பெய்து விட்டன.

ராஜம் :—சங்கரா! என்னிடம் ஆதி முதல் நீங்களிருவரும் அத்யந்த ப்ரீதியும், அளவிலா மதிப்பும் வைத்திருப்பதை நானறிவேன். ஆதலால் நீங்கள் என்மீது வீணுன சந்தேகமும் குற்றமும் கண்டு பிடிக்கமாட்டீர்களென்று நம்புகிறேன். சங்கரா! இனி எனக்குத் தாய் தந்தையர்கள் நீங்கள்தான். எனது நன்மை தீமைகளை கவனிக்க உங்களையே நம்பி இருக்கிறேன்.

சங்கரா! மோஹன் மகா ஏழை என்பதோடு, உற்றார் உற வினர் ஒருவருமே இல்லாதவர். அவருடைய பரிதாபகரமான இந்த சமயத்தில் அக்கிழவியை யார் கவனிப்பார்கள்? கிழவி இதே ஏக்கத் தில், விசனத்தில் இறந்து விட்டால் அதைக் கேட்டதும் அவருயிர் தபிக்கும். நமது காரியாலயத்தில் அண்டிப் பிழைக்க வந்ததன் பல னல்லவா அவருடைய கதி அதோகதியாகி விட்டது. இதை நாம் மறக்க முடியுமா?

சங்கரா! நீ யாருக்கும் தெரியாமல் ஆஸ்பத்திரிக்குச் சென்று நீ மோஹனனுக்குச் சினேகிதன் என்றும், கிழவியைக் கவனிக்க வந்ததாகவும் கூறி அவளைப் பார்த்து தேறுதல்கள் சொல்லி சிறிது ஆகாரமும் கொடுத்து விட்டு வருகிறாயா! அனாதையாய்க் கிடக்கும் கிழவியைக் கவனித்தால் புண்ணியமும் உண்டாகும். சங்கரா! இதை நீ யாரிடமும் சொல்லாதே! என்னை உன் சொந்த மகள் போல எண்ணிக் காரியத்தைச் செய்வாயா?'' என்று விசனம் நிறைந்த பார்வையுடனும் துக்கத்தால் கம்மிய குரலுடனும் கேட்டாள்.

ராஜத்தின் இதயத்திலிருக்கும் மோஹன் மீதுள்ள கரை காணாத ஆழ்ந்த அன்பின் உணர்ச்சியை அவளுடைய மனோ வேகத் தினால் அறிந்துகொண்ட சங்கரனுக்கு ஏற்கெனவே ராஜத்தின் தயாள குணமும் உத்தமப் போக்கும் நன்கு தெரியுமாதலாலும், அவன் மோஹனின் கண்ராவியான காட்சியை நேரில் பார்த்த தனாலும் உடனே மனம் இளகிவிட்டது.

"அம்மணீ! இதற்கென்ன ப்ரமாதம். மனிதருக்கு மனிதர் கூட உதவி செய்யாவிட்டால் அது கேவலம் ம்ருகத்தனமல்லவா! நான் இன்று பகலே சென்று விசாரித்து வருகிறேன். விதி யாரை விட்டது?'' என்று வேதாந்தம் பேசிக்கொண்டே போய் விட்டான்.

ராஜத்தின் இதயம் தவிக்கும் தவிப்பை யாரால்தான் அள விட முடியும்? தந்தையின் மரணம் ஒரு புறமும், மோஹனின் துய ரம் ஒரு புறமும் பாதிக்க தாமரையிலை நீர்த்துளிபோல தத்தளிக் கும் சமயம் சந்தானக்ருஷ்ணனும், நாகலிங்கமும் ஓட்ட ஓட்டமாக ராஜத்தின் அறைக்கு வந்தார்கள்.

கிருஷ்ணன் வெகு இறுமாப்பும், ஒரு விதமான தைரியமும் கொண்ட பார்வையுடன் "ராஜம்! கொலைபாதகனைப் பிடித்தாய் விட்டது. பரம தயாள சிகாமணியாகிய நம் தந்தையைக் கொலை செய்த சண்டாளன் யார் தெரியுமா! நீ ப்ரமாதமாக எண்ணி மதிக்கும் த்ரோகி, கொலைபாதகன் மோஹனேயாவன் தெரியுமா!

இன்றுதான் என் மனம் குளிர்ந்தது. என் கவலை நீங்கியது. என் ஆத்திரம் அடங்கியது. ராஜம்! இனியாவது அந்த அல்பனின் மீதுள்ள மதிப்பை விட்டு விடு. உன்னைப் பெற்ற பிதாவைக் கொன்ற கொலைபாதகனுக்கா நீ மதிப்பு வைப்பது?" என்றான்.

நாகலிங்கம் :—அம்மணீ! இனியும் சந்தேகமா! மோஹனே தான் கொலைசெய்தவன் என்று சாக்ஷி வெகு தெளிவாக விளங்கி விட்டது. அவன் சிறைச்சாலையில் அடை பட்டும் ஆயிற்று.

ராஜம் :—(ஆத்திரத்துடன் சீறி விழுந்தவாறு) ஐயா! சிறைச் சாலையில் அடைத்துவிட்டது மட்டும் உங்களிருவருக்கும் பெருமையல்லவே. இன்னொன்று பாக்கியுள்ளதல்லவா? அதுதான் தூக்கு மரம். மோஹன் தூக்கு மரத்தில் தொங்கிய பிறகு அந்த சந்தோஷத்தை என்னிடம் கூறும்போதல்லவா இன்னும் ஆயிரம் மடங்கு அதிகரித்த ஆநந்தமும், ஜெயம் பெற்று விட்ட அபாரமான மகிழ்ச்சியும் உண்டாகும். இந்த அல்பத்திற்கேவா இத்தனை கூறிவிடுவது... உங்கள் வீராதி வீரமும், தீராதி தீரமும் அப்போதுதான் அதிகமாகப் பரிமளித்து ப்ரகாசிக்கும். போய் வாருங்கள். என்னுடைய அனுமதி இன்றி என் விடுதிக்கு யாரும் வர வேண்டியதில்லை" என்று முடுக்காகக் கூறிவிட்டுப் பின்புறம் திரும்பிப் படுத்து விட்டாள்.

க்ருஷ் :—(கோபத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டு, ராஜீ! சற்று நிதானமாய்ப் பேசு. இனி உனக்கு யார் கதி. யாருடைய அதிகாரத்தில் நீ இருக்கிறாய். யாருடைய ஆதீனத்தில் இனி உன் வாழ்க்கை நடக்கப் போகிறது என்பதைக் கண்டிப்பாய் உணர்ந்து பேசு. நாக்கை வெளியில் விடாதே. குற்றம் செய்த எந்த கழுதைக்கும் ச்வர்க்க ஸ்தானம் தூக்கு மரம் என்பது கூற வேண்டுமா!

வெகு காலமில்லை. சில மாதத்திற்குள்ளேயே தூக்கு மரத்தில் தொங்கி விடுவான். அதையும் பார்த்து விடுவேன்.

ராஜம் :—(இடை மறுத்து) க்ருஷ்ணு! நான் யாருடைய ஆதீனத்திலிருக்கிறேன்; இருக்கப் போகிறேன் என்பதை நான் உணராமலில்லை. உன்னையும் என்னையும் படைத்த ஜகத் ரக்ஷகனின் ஆதீனத்தில்தான் என் வாழ்நாளும்—ஏன் உன் வாழ் நாள் கூடத் தான்—முடியப்போகிற தென்பதை நான் அறிந்துள்ளேன். நீ தான் அந்த உண்மையை அறியாது பாழாய்ப் போகிறாய். அதிகமான பேச்சு வேண்டாம்; போகலாம்'' என்று அலக்ஷியமாகக் கூறினாள்.

இது கேட்ட இருவரும் வெகு ஆத்திரத்துடன் வெளியே போய் விட்டார்கள். ராஜத்திற்கோ தானே நேரில் சென்று கல்யாணியம்மாளைப் பார்க்கலாமா என்று மனம் நாடுகிறது. ஆனால் அவளுடைய அப்போதிய நிலைமையில் அவ்வாறு செய்வது அசாத்யமாயிருந்ததால் குழம்பித் தவிக்கிறாள். தன் சகோதரன் தன்னை இனி எவ்விதம் நடத்தப் போகிறான் என்பது பற்றி கவலை யதிகரித்து விட்டதால் புழு போலத் துடிக்கிறாள். ஆகார நித்திரையும் அகன்றது. பித்து பிடித்துவிடுமோ என்றும் பயம் உண்டாகி விட்டது. என்ன செய்வாள் பாவம்?

“மோஹன் சிறைச் சாலையில் என்ன தபிக்கின்றானோ? அவனைப்பெற்ற குடல், நோயுடன் ஆஸ்பத்திரியில் எவ்விதம் துடிக்கின்றதோ! கொலையுண்டு இறந்த பிதாவின் ஆத்மா என்ன அல்லாடுகின்றதோ! ஹா! எத்தனை பயங்கரம்! எத்தனை அனியாயம்! எந்தச் சண்டாளன் கையும் மெய்யும் துணிந்து என் பிதாவைக் கொலை செய்திருப்பான் தெரியவில்லையே'' என்று கலங்கியவாறு இருக்கையில் சங்கரன் அங்கு வந்தான்.

அவனைக் கண்டதும் ராஜம் ஆவலுடன் “சங்கரா! ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தாயா! கிழவியின் உயிர் இருக்கிறதா! ஆகாரம் ஏதேனும் உட்கொண்டாளா!'' என்று அடுக்கடுக்காய்க் கேட்டாள்.

சங்க :—அம்மணீ! அந்த கோரத்தை மனிதர்களால் கண்டு சகிக்க முடியாது. கிழவியின் காலமும் முடிந்துவிடுமோ என்று சங்

தேகமாகவே இருக்கிறது. கண்ணில் ஆபரேஷன் செய்திருக்கையில் கண்ணில் நீர் ஆருயப்பெருகினுல் கண்ணிற்கு ஊனமல்லவா! வாய் திறந்து அதிகம் பேசினுல் கூட நரம்புகளுக்கு அதிர்ச்சி யுண்டாகு மென்று சொல்வார்கள்.

அந்தோ பரிதாபம்! கிழவியை தாதி எத்தனை சமாதானம் செய்தும் கேட்கவில்லை. "மோஹன்! மோஹன்.......என் செல்வா! நீயா கொலை செய்தவனும்.......நீயா சிறைச்சாலையிலிருப்பது. என் னருமை மோஹன்! என்னுருயிர் மோஹன்........எந்த சண்டாளர் களின் சதியாலோசனை உன்னைத் தாக்கியதடா! கண்ணே! மோஹன்!......மோஹன்!......மோஹன்.........என்று பிதற்றிய படியே இருக்கிருள்.

நான் சென்று பக்கத்திலமர்ந்து, நான் மோஹனின் ஸ்னேகி தன் என்றும், அவனுக்கு பயமில்லை. எப்படியும் கேஸ் அவனுக்கு ஜெயமாகிவிடும் என்றும், விடுதலையாகி வந்துவிடுவான் என்றும் எத் தனையோ கூறினேன். கையில் ஆகாரம் கொண்டு போயிருந்தேன். அதைக் கொடுத்துப் பார்த்தேன். கொஞ்சமும் சாப்பிடவே இல்லை.

"நீங்கள் இம்மாதிரி இருந்தால் மோஹன் சிறைச்சாலையில் பட்டினியே கிடந்து செத்து விடுவதாகக் கூறினுன்" என்று ஒரு பயமுறுத்தினேன். அதன் பின்னர் அவனுடைய க்ஷேமத்தைக் கோரி ஒரு வாய் கஞ்சி குடித்தாள். உடனே வாந்தியாகிவிட்டது. என்ன செய்வாள் பாவம்! வயிற்றில் சகிக்க முடியாத சங்கடம் செய் கிறது! அலற்றுகிருள்.

அம்மா! அந்தம்மாளின் வயிறெரிந்த சாபம் சற்றும் வீணே போகாது. உண்மையாகச் செய்துள்ள சண்டாளர்களைத் தாக்காமலிருக்கவே முடியாது. என்ன அக்ரமம்......அம்மணீ! நீங்கள் ஒருவருக்கு தேறுதல் கூறுவதுபோல உங்களுக்கு நான் கூறுகிறேன். மூன்று நாட்களாக இப்படி ஆகாரமே கொள்ளாதிருந் தால் என்ன செய்வது? மெல்ல பிடித்தவரையில் ஒரு கவளம் சாப் பிடுங்கள். எழுந்து வாருங்கள்." என்று அன்போடு கேட்டான்.

ராஜம் :—சங்கரா ! நானு சாப்பிட வேண்டும். எனக்கா சாப் பாடு பிடிக்கும். சங்கரா ! என் மனம் இனி நிம்மதியாக வேண்டு மாயின் இரண்டே காரணங்கள் தானிருக்கின்றன. ஒன்று என் தந்தையைக் கொன்ற படுபாவி, கொலைபாதகன் யாரோ அதன் குற் றம் வெளியாகி அவன் சிறையில் அடைபடல் வேண்டும். மற் றொன்று என் தந்தையின் ஆவியைப்போல என்னுவியும் சாந்த மடையவேண்டும். இவ்விரண்டுமின்றி இனி என்னை ஒரு நாளும் பழய மாதிரி சொப்பனத்திலும் பார்க்க முடியாது. இதுதான் நிச்சயம் ... சங்கரா ! நீ தினம் தவறாமல் இரண்டு தரமாவது ஆஸ்பத்திரிக்குச் சென்று கிழவியைக் கவனித்துக் கொண்டு வா ; மறக்காதே!'' என்றாள்.

ராஜத்தின் நிலைமை அயோமயமாய் ஆகாசமும் பூமியும் ஒன்றாக விருப்பதுபோலாகிவிட்டது. "எந்த விதமாக இனி இக் குற்றத்திலிருந்து நிரபராதியான மோஹனைத் தப்பச் செய்வது. மனித திக்கும் இல்லை. பணத்தின் உதவியுமில்லாத கிழவி அவருக் மாக எவ்விதம் வாதாட முடியும்! நாம் நேர்முகமாகச் சென்று செய்வதென்றால் நமக்கும் அதோகதிதான்.

அதோடு என் சகோதரனே மோஹனுக்கு எதிரியாகி விட்டான். பெற்ற தந்தையைக் கொலை செய்தவனுக்காகப் பரிந்து வாதாடுகிறாள் என்று ஒரு மாதிரியாக நம்மைக் கூறிவிடுவார்களோ என்னவோ! மனித சகாயமும், பண சகாயமும் இல்லாதவரையில் யார்தான் என்ன செய்ய முடியும்?'' என்று ராஜம் பலவித யோசனையில் குழம்பிப்போய் இருப்பதைக் கண்ட சங்கரன் "அம்மணீ! என்ன யோசனை செய்து பெருமூச்சு விடுகிறீர்கள்? என்னால் செய்யக்கூடியது ஏதேனுமுண்டாயின் சொல்லுங்கள்.'' என்று வணக்கமாய்க் கேட்டான்.

ராஜம் :—சங்கரா! உன்னால் அந்த உதவியாகுமாயின் அப் போதே தெரிவித்திருக்க மாட்டேனா? பொருளிலார்க்கு இவ் வுலக மில்லை; அருளிலார்க்கு அவ்வுலகமில்லை. என்பது பொய்யா! பொருளுமின்றி, மனித சகாயமும் இல்லையாயின் யாரால்தான்

என்ன செய்ய முடியும்? சங்கரா! மோஹன் நிரபராதி குற்றமற்றவன் என்று என் மனம் சத்தியமாக அறியும். ஆனல்...அந்த அனுதைக் கிழவி என்ன விதமாக இந்த வழக்கில் வாதாடி ஜெயிக்க முடியும்? பணமிருந்தாலல்லவோ பேசலாம்.

சங்க:—அம்மா! உலகானுபவம் இன்னும் தங்களுக்குத் தெரியாது. வழக்காவது வாதாடுவதாவது? நியாயவாதிகளென்று பெயர் படைத்துள்ள எல்லா வக்கீல்களுமே நியாயத்திற்கும் தருமத்திற்கும் பாடு படுகிறார்களென்று நினைக்கிறீர்களா! அதுதானில்லை. தாங்கள் ஒரு கட்சிக்காரனைப் பிடித்துவிட்டால் அவனை மனிதனாகவே நினைக்காமல் கறவைப் பசுவாக எண்ணிக் கறந்துகொண்டு போவதில் தான் நியாயவாதம் செய்வார்கள்.

அப்பப்பா! என் ஒன்று விட்ட தங்கையின் புருஷன் ஏதோ ஒரு வழக்குக்காக ஒரு பெயர் பெற்ற வக்கீலை வைத்துவிட்டு அவன் பட்ட பாடு போதும் போதும் என்று ஆய்விட்டதாம். அந்த மகா அயோக்யன் தன் கக்ஷிக்காரனுக்கும் குல்லாவைப் போட்டு விட்டு பிரதிவாதியிடமும் பணத்தை வாங்கிக்கொண்டு வழக்கை ஒட்டிவிட்டு கடைசியில் இனி இது விபரீதமாகிவிடும்போலவிருக்கிறது. ராஜியாய் விடுங்கள் என்று விளக்கெண்ணெய் நியாயங் கூறிவிட்டானும்.

பணத்தைக் கறக்கும் நோக்குடையவர்களிடம் நியாயம் கிடைக்குமா! சில புண்ணியவான்கள்தான் நியாயவாதி என்றால் சரியான நியாயப்படி நடக்கிறார்கள். இந்த கிழவிக்கோ கையில் காலணு இல்லை. ஜனக்கட்டும் இல்லை. ஒரு பெரிய மதிப்பான பெருங்காய பரணி போன்ற பெயருமில்லை. காய்கரி விற்றவள் பாவம்! இவள் ஓர் தொழிலாளி. இவள் வக்கீலை வைப்பதென்றால் அது ஆகும் காரியமா! இனமாக யாரும் வரமாட்டார். பணம் இருந்தால்தான் எதுவும் நடக்கும். கொலைக் குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்வதென்றால் மிகவும் சாமர்த்தியமான வக்கீலை வைத்து பணத்தை ஜலமாக இறைக்கவேண்டும்.

பணமிருந்தால்தான் கூட்டங் கூட்டமாய் உறவுமுறைகள் தோன்றுவார்கள்; சினேகிதர்கள் கிளம்புவார்கள். வக்கீல்களும் வீட்டு வாசலைச் சுற்றுவார்கள். இல்லையேல் அனுதைப் பிணத்திற்குச்

சமானந்தான். வக்கீல்களின் வேடிக்கைகளை அவர்களால் இம்சைப் பட்ட கக்ஷிக்காரர்களைக் கேளுங்கள் தெரியும்.

அம்மணீ! நான் இந்த சுயம்பாகி வேலைக்கு வந்ததற்குக் காரணமும் ஓர் பாழாய்ப் போன வழக்குதான். நிலத்தின் விஷயமாக ஏற்பட்ட வழக்கில் கடும் பௌரஷங்கொண்டு வழக்காடினேன். சகல நிலங்களையும் விற்று வழக்காடித் தோற்றுப் போய் தலையில் துணியைப் போட்டுக் கொண்டு வந்து சேர்ந்தேன். அது முதல் வழக்கென்றாலே எனக்குப் பயம். உத்தமர்களான வக்கீல்களை அக்கிழவி எங்கே தேடுவாள்? என்ன செய்வாள் பாவம். விதி விதி என்பது இதுதான்'' என்று கூறினன்.

இதுகேட்ட ராஜம் "சங்கரா! நீ கூறுவதெல்லாம் மிகவும் உண்மை. நமது பத்திரிகைக்கு இதுமாதிரி விஷயங்கள் எத்தனையோ வந்திருக்கின்றன. இப்போது என்ன செய்ய முடியும்!" என்று மிக்க விசனித்தாள். சங்கரன் தன் வேலைக்குப் போய்விட்டான். ராஜம் அதே எண்ணத்துடன் தவிக்கிறாள்.

மோஹனின் உருவமும், தன் பிதாவின் உருவமும் கண்ணெதிரில் காட்சி கொடுத்துப் பின்னும் கலக்குகின்றன. சாவின் பொருட்டு விசாரிப்பதற்கு அடிக்கடி மனிதர்கள் தொந்தரவு கொடுப்பதும் சாவைப் பற்றி பலவிதமாகப் பேசி மோஹனைக் கண்டபடி திட்டுவதும் அவள் உயிரை வாங்குவதுபோல விருந்தன. இச்சில தினங்களுக் குள்ளேயே உடல் மெலிந்து ஏக்கம் பிடித்து பயித்தியக்காரி போலாய் விட்டாள்.

அனாதைப்பெண்

அல்லது

கனிந்த காதலர்

அற்புதமான நீதிகளைப் போதிக்கும் நாவல்

17-வது அதிகாரம்

இடியும் மின்னலும்—இதயப் பிளவும்

உலகத்திலுள்ள எந்த விதமான தொழிலைச் செய்தாலும் அத்தொழிலுக்கும், தமக்கும், தொழிலால் பிறருக்கும் நன்மையும் கீர்த்தியும் சம்பாதிக்கும் முறையில் செய்யக்கூடிய உத்தமர்களே சிறந்தவர்களாய், பொது மக்களின் பேராதரவிற்கும் அன்பிற்கும் பாத்திரமாய் விளங்குகிறார்கள். அவ்வகையிலே நமது இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் ஆதி முதல் உழைத்து வருவதனால்தான் அவர் அதி பாலியத்திலேயே பெரிய பதவியை அடைந்ததோடு அத்தொழிலின் கண்ணியத்தையும் ப்ரகாசிக்கச் செய்தார்.

ஏகாம்பரம் மோஹனைச் சிறைச்சாலையில் கொண்டு லாக்கப்பு செய்யும்போது "இவனை உண்மையில் கையும் களவுமாகப் பிடித்திருக்கையில் இவன்மீது ஏன் கொலைப்பாதகன் என்கிற சந்தேகங்கூட அப் பெண்மணிக்குப் பிறக்கவில்லை?" என்ற சந்தேகந்தோன்றியது. அவர் அன்று தன் வேலைகள் முடிந்ததும் நேரே ராஜத்தின் வீட்டிற்கு வந்தார்.

ராஜம் தலைவிரி கோலமாய்ப் பார்ப்போர் மனம் பதறும் வண்ணம் படுத்திருப்பதைக் கண்ட ஏகாம்பரத்திற்குச் சற்று விசனமாகவே இருந்தது. அவரால் முதலில் ஏதும் பேச முடியாது அவளையே உற்று நோக்கினார். ராஜம் கண்ணீர் வழிய ஏகாம்பரத்தை நோக்கி, தாழ்ந்த குரலில் பேசத் தொடங்கி "ஐயா! கொலையாளியைப் பிடித்தாய் விட்டது போலிருக்கிறது. இனி தண்டனை ஒன்றுதான் பாக்கி. என்னருமைப் பிதாவின் உயிர் எவ்விதம் அநியாயமாய், அக்ரமமாய்ப் போயிற்றோ அதற்குத் துணையாக இன்னொரு நிரபராதியின் உயிரையும் தூக்கு மரத்தின் மூலம்

அனுப்பத் தீர்மானித்து விட்டது உங்கள் சட்டம்.'' என்று கூறும் போது ராஜத்தின் பரிதாபத்தைக் கண்டு சகிக்க முடியாத விதமாய் இருந்தது.

ஏகாம்பரத்திற்கு இம்மொழி சுறுக்கென்று தைத்தது. "இவளுடைய எல்லை கடந்த உணர்ச்சியையும் அன்பையும் கண்டதும், கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் இம்மடமயிலாள் அந்த ஏழை மோஹனை மனமாறக் காதலிக்கிறாள் என்பது தெட்டென விளங்கி விட்டது. இத்தகைய ஆழமான காதல் கொண்டுள்ள மனிதனின் கதி இப்படியாகி விட்ட தென்றால் அவள் உள்ளம் எப்படித் தானிருக்கும்'' என்று தனக்குள் தானே எண்ணி அவளையே நோக்கினார்.

ராஜம் :—ஐயா ! உண்மையில் அவர் கொலைப் பாதகனா? உண்மையில் அவர் குற்றவாளியா !

ஏகாம்பரம் :—அம்மணீ ! இதற்கு நான் என்ன பதில் கூறுவேன்? கிடைத்துள்ள சாக்ஷிகளும் சந்தர்ப்பங்களும் அவனைக் குற்றவாளிதான் என்று நிரூபிக்கின்றன. அம்மா ! கோபிக்காதே.... நான் உன் பிதாவைப் போல எண்ணிக் கேட்கிறேன். நீ அந்த மோஹனைக் காதலிக்கிறாயா !

ராஜம் :—அந்தக் கேள்விக்கு அவளால் பதில் கூறவே முடியவில்லை. கண்ணீர் ஆறாய்ப் பெருகுகின்றது. மார்பு படபடவென்று அடித்துக் கொள்கிறது. அவளால் தடுக்க முடியாத உணர்ச்சியும் ஆவேசமும் சுற்றிக்கொண்டன. தன்னிரு முழங்கைகளையும் மேஜையின் மீது ஊன்றி, கைகளைக் கன்னத்தில் பதித்தவாறு மேஜையை நோக்கினாள்.

கண்ணீர் முத்து முத்தாக மேஜையின்மீது விரித்திருந்த அழகிய விரிப்பின்மீது விழுந்து படாரென்று உடைந்து செல்லும் காட்சி ஏகாம்பரத்தின் இதயத்தைத் தாக்கியது. அவரும் பதிம் பேச முடியவில்லை. ராஜம் அவர் முகத்தை சில வினாடிகள் உற்று நோக்கினாள்.

விசனமே வடிவமான அம்முகத்தில் ஜொலித்த இரக்கமும் பரிதாபமுமான களை ஏகாம்பரத்தின் உணர்ச்சியைக் கிளறியது. "ஆம். நான் அவரைக் காதலிக்கிறேன். அவர் தப்பும் மார்க்கம் ஒன்றுமில்லையா" என்று கேட்பது போல அவள் கூரிய பார்வையின் ப்ரகாசம் விளக்கியது. என்ன செய்வார் பாவம்.......அம்மா! நான் என்ன செய்வேன்? நான் ஓர் உத்யோகஸ்தன். அதிகார வர்க்கத்தின் கீழ்ப்பட்டவன். சட்டம் செல்லும் திட்டத்தில் நானும் நடக்கக் கடமைப் பட்டவன்." என்றார். ஆயினும்......அதற்குமேல் அவராலும் பேசமுடியாது தொண்டையை அடைத்தது.

ராஜம்:—ஐயா! அவர் தப்பும் மார்க்கம் இனி இம்மையில் இல்லை என்கிறீர்களா! நிரபராதியைத் தூக்கிலிடுவதுதான் சட்டத்தின் திட்டம் என்கிறீர்களா! எந்த மகானுபாவன் என் தந்தையின் உயிரைப் போக்கினானோ, அந்த மகானுபாவனுக்கே இன்னும் மூன்று உயிர்களும் பலியாகப் போகின்றன. அதன் பிறகாவது அவனுக்கு இதயம் என்பது ஒன்றுண்டாயின், அவனுக்கும் ஒரு காலத்தில் மரணம் நிச்சயம் என்ற எண்ணம் உதிக்குமாயின் இப்போது செய்த அனியாயங்களை உணராமலா போவான்?

ஏகாம்:—அம்மா! சட்டம் நியாயத்தைச் செய்யுமேயன்றி அனியாயத்தைச் செய்ய சட்டம் ஏற்படவில்லை. சட்டத்தின் மீது நொந்து பயன் யாது? அம்மா! உன்னுடைய துயரமும் உணர்ச்சியும் எவ்வளவு உச்சத்திலிருக்கிறதென்பதை என்னுள்ளம் முற்றிலும் அறிகின்றது. அவன்தான் குற்றவாளி என்பதற்கு உன் பிதாவின் நோட்டுக்களே சாக்ஷியாகி விட்டன. அந்த இரவு அவன் சைகில் இரவல் வாங்கிக் கொண்டு அங்கு சென்றதை அவனே ஒத்துக் கொண்டான். அவன் வீட்டில் சோதனை செய்து பார்த்ததில் வேலையாட்களுக்கு ரசத்தில் மயக்க மருந்து போட்ட அதே சூரணம் அவன் பெட்டியில் இருந்தது. நாய்களுக்குக் கொடுத்துள்ள பாஷாணமும் அதே பெட்டியில் கிடைத்தது. இன்னும் வேறு என்ன வேண்டும்? இத்தனை சாக்ஷியங்களை யன்றோ சட்டம் ஆதரிக்கும்? என்ன செய்வது?—என்றார்.

ராஜம் :—ஆனால் தாங்களும் அவரைக் குற்றவாளிதான் என்று நம்புகிறீர்களா?

ஏகாம் :—அம்மா! நானோ சட்டத்தில் கட்டுப்பட்டவன். இந்த சாக்ஷிகளைக் கொண்டு குற்றவாளி யவன்தான் என்று தீர்மானிக்க வேண்டியவன்............ ஒருகால் வறுமையின் கொடுமையினாலும், தாயாரின் பாதையை நீக்க வழி இல்லாமையினாலும், உன் பிதாவி னிடம் உண்டாகிய ஆத்திரத்தினாலும் ஏன் இக்காரியத்தை அவனே காலத்தின் கோலமாகக் கெடுமதி கொண்டு செய்திருக்கலாகாது?

ராஜம் :—(ஆத்திரத்துடன்) ஐயா! தாங்கள் அம்மாதிரி கன விலும் கூட நினைக்கவேண்டாம். அவர் காலில் ஒட்டிய தூசியும் அவ் வாறு செய்யாது என்பதை நான் எப்படி வேண்டுமாயினும் சத்தியம் செய்து கூறுவேன். ஐயா! நீங்களோ பல வருஷங்களாக இம் மாதிரியான விஷயங்களில் ஊடாடி நிரம்பவும் அனுபவம் வாய்ந்த வர்கள். நானோ உலகமே இன்னதென்றறியாத பேதை. எனினும் இந்த காரியத்தை வேண்டுமென்று யாரோ தீர்க்கமானச் சதியா லோசனையுடன் செய்திருக்கிறார்களென்பது மட்டும் என் இதயத்தில் ஏதோ ஒன்று சதா கூறிக்கொண்டே இருக்கிறது இதைக் கூறி னால் ஏதோ அன்பின் ஆழத்தினால் சொல்வதாக நினைக்கலாம். நான் அவரை மணக்கும் பாக்யம் பெறாவிடினும், அவர் சத்தியசீலர் என் பதை மட்டும் கட்டாயமாய் என்றும் கூறுவேன். ஐயா! அவர் தப் பும் வழியே இல்லையா! அவர் தூக்கு மரத்தில்தான் ஊசலாட வேண்டுமா? இவ்வுலகத்தில் பிறந்ததன் பயன் அவருக்கு அவ்வளவு தானா!'' என்று கேட்கும்போது கண்ணீர் மள மள வென்று பெருகி விட்டது.

அவளுடைய பார்வையில் மிகவும் இரக்கமும், பரிதாபமும் விசனமும் கலந்து பளிச்சென்று ஜ்வலித்தன. அளப்பரிய விசனம் தொண்டையில் அடைத்துக் கொண்டிருப்பதாலுண்டான கம்மல் அவளுடைய குரலில் வெளிப்பட்டது.

ஏகாம் :—அம்மா! உன்னுடைய பரிதாபத்தைக் காணச் சகிக்க முடியவில்லை. நான் கல்லினும் கடின சித்தமுடையவனாக இருக்கின்

றேன். என்ன செய்வேன்? அம்மணீ! பரிசுத்தமான—இதய பூர்வ மான காதலும், சத்தியமும்தான் உனக்கு வெற்றியைக் கொடுக்க வேண்டுமே யன்றி வேறு ஒன்றினுலும் இல்லை. கடவுளை நம்பி இரு— என்று கூறும்போது அவர் கண்களைக் கண்ணீர் மறைத்தது.

ராஜம் :—ஐயா! கடவுளைத்தான் சதா வேண்டுகிறேன். இறந்து விட்ட பிதாவை இனி கடவுள் மீட்டுத் தரப் போவதில்லை. ஒரு பாப மும் அறியாத நிரபாராதி, உத்தமர், மகா மானி, சத்குண சீல ரான மோஹறனை மட்டும் தூக்கு மரத்தில் மாட்டாதிருக்க அக் கடவுள் க்ருபை புரிந்தால் போதும்......

ஏகாம் :—அம்மா !...சத்தியத்திற்கு என்றும் அழிவில்லை...... ராஜம்! நீ உன்..........ப்ரிய..........மோஹறனைப் பார்க்க விரும்பு கிறுயா..........

ராஜம் :—(அலறியவாறு) ஹா!.......மோஹறனைப் பார்ப்பதா! நானு....நானு அந்த புண்ணிய மூர்த்தியைச் சிறைச்சாலையில் பார்ப் பது. ஐயோ!......சிறைச்சாலையில் அவரைக் காண என்னுள்ளம் சகிக்குமா!....நான் மனத்தைத்தேற்றிக் கொண்டு பார்த்தாலும் பிறர் என்னைப் பரிகஸித்து ஏசமாட்டார்களா! தன் பிதாவைக் கொன்ற பாதகனைப் பார்க்கச் சென்ருள் என்று கேலிக் கூத்தடிப்பார்களே... அந்தோ! மோஹறன் தான் என்னைப்பற்றி என்ன நினைப்பார்?.......

ஏகாம் :—ராஜம்! விசனிக்காதே; நீ ஒருகால் பார்க்க ப்ரியப் படுவாயோ என்று கேட்டேன். ஏனெனில் கைதிகளை இலேசில் பார்க்க முடியாது. ஆகையினுல் நீ ப்ரியப்பட்டால் அந்த ஒரு உதவியை வேண்டுமாயின் செய்யலாம் என்று கேட்டேன். நீ பார்க்க விரும்பினுல், விரும்பும்போது என்னிடம் தெரிவித்தால் நான் அழைத்துச் செல்கிறேன்......நான் சென்று வரட்டுமா......என்று ராஜத்தை ஒரு விதமான இரக்கத்துடனும் பார்த்தார்.

ராஜம்:—(அவருக்கு மண்டியிட்டு வணங்கி கண்ணீர்வடித்தபடி) ஐயா! அவர் தப்பும் மார்க்கமில்லையா! அவர் கதி அதோகதி தானு! அவருக்கு எப்படியாவது உயிர்ப் பிச்சை கொடுத்து அதனுல் அவ ருடைய தள்ளாத வயது முதிர்ந்த தாயைக் காக்க முடியாதா!...

இந்த கோரமான விசனக் கேள்விக்கு என்ன பதில் சொல்வார் பாவம்........உம்......எல்லாம் சோதனை. சோதனை......அம்மணீ! ராஜம்! மனத்தைத் தளரவிடாதே! மனித யத்தனத்தில் செய்ய முடிந்த எல்லா ப்ரயத்தனங்களையும் செய்து பார்க்கலாம். பிறகு கடவுள் விட்ட வழி......நான் வருகிறேன்; நேரமாகிவிட்டது.'' என்று கூறிக்கொண்டே போய்விட்டார்.

ராஜத்தின் மனவேதனை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதன் மத்தியில் தர்மலிங்கத்தின் கர்மாதிகள் நடைபெற்றன. வீடு நிறைய பந்துக்களும் மற்றயோரும் கும்பு கூடிவிட்டதால் ராஜம் தன்னறையை விட்டு வெளியிலேயே வருவதில்லை.

சமயல்கார சங்கரன் அவ்வப்போது கல்யாணியம்மாளைப் பற்றிய தகவலையும் கேஸின் விவரத்தையுங் கூறுவான். சந்தர்ப்ப சாக்ஷியங்களினாலும் 100 ரூபாய் நோட்டுக்களின் விவரத்தினாலும், சைகலில் இரவு சென்றது உண்மையாகையினாலும் தன்னை தர்மலிங்கம் ஏற்கெனவே தள்ளிவிட்ட ஆத்திரத்தினாலும் மோஹன் செய்தான் என்று குற்றமும் ருசுவாகி விட்டது. வழக்கு விசாரணை கீழ்க்கோர்ட்டில் முடிந்தது (செஷன்ஸுக்கு அனுப்பிவிட்டார்கள்.)

சிறைச்சாலையிலுள்ள மோஹனின் கதியை, கண்ராவியைக் கூறவேண்டுமா? ஏற்கெனவே விசனத்தினால் மெலிந்துவிட்ட அவன் தேகம் இப்போது அடையாளமே கண்டுபிடிக்க முடியாது துரும்பிலும் துரும்பாக மாறிவிட்டது. அவனுடைய விசனம் எல்லை கடந்துவிட்டது. அவமானமோ தாங்க முடியவில்லை.

தன் தாயின் உருவம் ஒரு புறம் அவனைச் சித்திரவதைசெய்கிறது. தன் பிதாவின்மீதுள்ள க்ஷாத்திரத்தினால் பிதாவைக் கொன்று பணத்தையும் ஒருகால் களவாடி இருக்கலாம் என்று ராஜம் எங்கே தன்னைப்பற்றி நினைத்துவிடுவாளோ, நினைத்திருக்கிறாளோ! என்ற அவமானமும் விசனமும் அவனை நிமிடத்திற்கு நிமிடம் கொன்றுகொண்டே இருக்கின்றன. அவனால் அதைச் சகிக்கவே முடியவில்லை. புழுவாகத் துடிக்கிறான்.

அனாதைப் பக்ஷிபோன்ற அவனுக்கு அந்த தகவல்களைத் தெரிவிக்க யார் இருக்கிறார்கள். அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த

யாரிடமும் பேசவும் நடுங்கினன். விதியை எண்ணி எத்தனை நேரம் தான் புலம்புவது? சகிக்கமாட்டாது அபாரமாய்ப் பொங்கும் துக்கத்துடன் தனிக் கொட்டடியில் புலம்பிக்கொண்டே படுத்திருக்கையில் ஏகாம்பரம் அங்கு வந்தார்.

மோஹனின் நிலைமையைக் கண்டு மனம் உருகிய ஏகாம்பரம் அவன் ஓர் கொலைக் குற்றக் கைதி என்பதையும் மறந்து "மோஹன்.!" என்று அழைத்தார். எதிர்பாராமல் தன்னை யாரோ அழைப்பதைக் கேட்டு அலறியவாறு மோஹன் கண்ணைத் துடைத்துக்கொண்டு எழுந்து கை கட்டி மரியாதையாயும், வணக்கமாயும் நின்ருன்.

ஏகாம் :—மோஹன்! இப்படி தினம் சதா சர்வகாலமும் புலம்பிக்கொண்டிருந்தால் உன் உடம்பு எதற்கு உதவும்? உன் கண்களும் கெட்டுவிடுமன்றோ!

மோஹன் :—(புலம்பியபடியே) ஐயனே! இனி எனக்கு சுகம் என்பது ஒன்று உண்டா! உத்தமன் என்று பெயர் வாங்கி கண்ணியமாய்க் கால் வயிறு கஞ்சி குடித்து இன்பமாய்க் காலந்தள்ளிய நான் அதமன், கொலைக்காரன் அதிலும் அன்னமிட்ட வீட்டிலேயே கன்னம் வைப்பது என்பது போல என்னை அன்புடன் ஆதரித்துப் போஷித்து வந்த உத்தம ப்ரபுவையே கொலை செய்தவன்—கொலைப் பாதகன்—என்ற பெயர் வாங்கிய பிறகு,இனி நான் உலகில் வாழவும் வேண்டுமா! சத்தியத்திற்கு மதிப்பில்லாத இக்காலத்தில் நிரபராதியான எனக்கு நீதியுங் கிடைக்குமா!......வழக்காவது விரைவில் முடிந்து நான் முன் ஜென்மாவில் செய்த பாதகத்திற்காக என்னைத் தூக்கிவிட்டு என்னுயிரை சீக்கிரம் மாய்த்துவிட்டால் அதுவே போதும். இவ்வுலகில் இனிமேல் நான் வேண்டக்கூடியது அதொன்றுதான். மகா பாபியாகிய எனக்கு அதுவும் சீக்கிரம் கிடைக்குமோ கிடைக்காதோ! (கண்ணீர் கொட்டுகிறது)

ஏகாம் :—அப்பா! மோஹன்! மேல் கோர்ட்டுக்கு உன் வழக்கை மாற்றிவிட்டதால் உன்னை வெளியூருக்குக் கொண்டுபோய்விடப் போகிருர்கள். நீ அதற்குள் யாரையாவது பார்க்கவேண்டுமாயின், உன் விருப்பம் ஏதேனும் இருக்குமாயின் தெரிவி.

மோஹன் :—ஹா!......என் தாயாரின் உயிர் இருக்கிறதா! என் தாயின் திருமுகத்தை யொருமுறை பார்த்தால் போதும்...... என்னுருயிர் அன்னையின் தரிசனம் கிடைத்தால் போதும்........ ஐயா! நானே திக்கற்றவன். மனித திக்குமில்லை, செல்வத்திலும் திக்கில்லை......நன்மையோ, தீமையோ தாங்கள் இவ்வேழையிடம் அன்பு காட்டுவதால் தங்களிடமே கூறுகிறேன். குற்றமாயின் அதற் குள்ள தண்டனையையும் ஏற்கச் சித்தமாயிருக்கிறேன்......ஐயா..... என்னை மீறிய உணர்ச்சியினால் வெளியிடுகிறேன். நான் கொலை செய்ததாகக் கூறும் தர்மலிங்கம் ப்ரபுவின் திருச்செல்வி ராஜ லக்ஷ்மியைத் தாங்கள் சந்தித்திருப்பீர்களல்லவா! அந்த மாதரசி எப்படி இருக்கிறார்கள்? அவர்கள் என்னைப்பற்றி உண்மையாக என்ன எண்ணி இருக்கிறார்கள். தங்களுக்குத் தெரியுமாயின் தயவு செய்து கூறவேண்டுகிறேன்.'' என்று கல்லும் கரையும் வண்ணம் கேட்டு அவரையே பரிதாபத்துடன் நோக்கினான்.

ஏகாம்:—(ராஜத்தின் பரிதாபம் அவர்மனதில் சூழ்ந்திருப்பதால் மோஹனின் வாக்கியம் அவரையோர் ஆட்டு ஆட்டிவிட்டது. தன் னுடைய உத்யோக ஹோதாவின் கவுரவத்தையும் விட்டுக் கொடுக் காமல் முக மாறுதலை யடக்கிக்கொண்டு, "மோஹன்! விதியின் ஆட்சியில் சந்தர்ப்ப சாக்ஷிகளால் சட்டமும், உனக்குள்ள விரோதி களும் உன்னைக் குற்றவாளி என்று கூறச் செய்ததேயன்றி உன் னருமைக் காதலி, உன்னிதயக் கோயிலில் வீற்றுள்ள இன்பவல்லி ராஜலக்ஷ்மி உன்மீது ஒரு எள்ளத்தனையும் சந்தேகிக்கவில்லை. உன் மீது முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த பக்ஷமாய் இருக்கிறாள்...

இந்த வார்த்தைகள் மோஹனின் செவியில் அம்ருததாரை வார்த்ததுபோல் தோன்றின. "இவருக்கு இந்த ரகஸியம் எவ்வாறு தெரிந்தது?'' என்று வியப்பும் அடைந்தான். அவனுடைய உணர்ச்சி யின் மிகுதியினால் "ஐயனே! இது உண்மையான வார்த்தையா! ராஜம் என் நிரபராதித்தன்மையை அறிந்திருக்கிறாளா! ஹா!...கட வுளே!.....சுழல் காற்றில் அகப்பட்டுத் தவிக்கும் கப்பலுக்கும் நிலை கிடைத்ததுபோல் இருக்கிறது.'' என்று இன்பமும் துன்பமும் கலந்த கண்ணீர் வழியக் கடவுளைத் தொழுதான்.

ஏகாம் :—மோஹன்! நீயும் நானும் இதுபரியந்தம் ஒருவரை யொருவர் பார்க்காதவர்களாக விருந்த போதிலும் உன்னுடைய முகத்தைப் பார்த்ததும் நீ பரிசுத்தவான். நிரபராதி. குற்றமற்ற வீரன் என்று என்னை யறியாது என்னிதயத்தில் ஏதோ ஒன்று கூறுகின்றது. அதான் காரணம் எனக்கே தெரியவில்லை. உனக்கு என்னால் முடிந்த உதவியைச் செய்து உனது குற்றமற்றத் தன்மையை விளக்கி உன் காதலியின் இனிய வதனத்தை மலரச் செய்ய நான் சித்தமாயிருக்கிறேன்.

மோஹன்! நீ சற்றும் அதைரியப் படாமலும், பயப்படாமலும் உனக்குத் தெரிந்த விஷயங்களை உனக்கு ஆதாரமானவை ஏதேனும் இருப்பின் சொல்லு. அதைக் கொண்டு நான் கூடிய வரையில் முயன்று பார்க்கிறேன்.

என்ற வார்த்தைகளைக் கேட்கும்போதே மோஹனின் இதயத்தில் உண்டாகிய சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. அவனை மீறிய ஆநந்தத்துடன் ஏகாம்பரத்தின் காலில் தடாரென்று விழுந்தான். கண்ணில் நீர் அருவிபோலப் பெருகுகின்றது. அவனுடைய வாய் திறந்து பேசவே முடியவில்லை. சில விநாடிகள் ஊமைபோலானான்.

பிறகு சற்று தெளிந்தவனாய் ஏகாம்பரத்தை நோக்கி "ஐயனே! நான் அளவிலாத மலைக் குவியல் போன்ற பாபத்தைச் செய்திருக்கதையிலும் ஒரு கடுகளவு புண்ணியம் செய்திருப்பதை இப்போதே அறிகிறேன். கடவுளேதான் எனக்குச் சகாயம் செய்ய நேரில் வந்து விட்டதாக நான் நினைக்கிறேன்.

ஐயனே! எனக்குத் தக்க சாக்ஷிகள் எனக்குத் தெரிந்த வரையில் ஏதும் காணப்படவில்லையே! அன்றிரவு எனக்குக் கொடுத்த கடிதம் அப்படியே இருக்கிறது. அந்த கையெழுத்தைக் கொண்டு ஒருகால் ப்ரயத்தனப் பட்டால் என்னமோ? அக்கடிதம் கொடுத்ததே என்னை சூதாக அகாலத்தில் அவ்விடத்தில் அனுப்பும் சதியாலோசனையுடன் செய்ததென்று எனக்குத் தோன்றுகின்றது. என் பெட்டியிலேயே அக்கடிதம் இருக்கிறது.

ஏகாம் :—அப்பா! மோஹன்! கடவுளின் க்ருபை இருக்குமா யின் எப்படியோ நீ தப்பும் வழி உண்டாகி விடும். கவலைப்படாதே! நான் என்னல் கூடிய வரையில் உழைத்து விடுகிறேன். பிறகு ஈசன் செயல் நீ ராஜத்தைப் பார்க்க விரும்புகிருயா?

மோஹன் :—ஹா! நான் ராஜத்தைப் பார்க்கும் பாக்கிய நிலையில் இருக்கிறேனு. எனக்கு அந்த சந்தர்ப்பம் கிடைக்குமா! நான் கொலைக்காரன், மகா பாவி என்ற கவசத்தைப் போர்த்திருப்பவ னல்லவா!—என்று கூறும்போது அவன் துக்கம் கரை புரண் டோடியது.

ஏகா :—மோஹன்! இனி என்ன செய்வது? நீ விரும்பினல் நான் அந்த ஒரு உபகாரம் செய்ய முடியும். என் பதவியின் பலன் அவ்வளவுதான்.

மோஹன் :—ஐயனே! கரும்பு தின்னக் கூலி கேட்பாருண்டோ! நான் செஷன்ஸுக்கு மாற்றப்பட்ட உடனே தீர்ப்பின் முடிவு தெரிந்திருக்கிறது. எனக்கு மரண தண்டனை என்றதை அறிந்த பின்னர் என்னுருயிர் அன்னையையும்......ராஜத்தையும் பார்க்கச் சகியேன். அவர்களும் பார்க்கச் சகிக்கமாட்டார்கள். ஆகையினல் என் இன்பவல்லி ப்ரியப்பட்டால் நான் கண்ணாரக் கண்டு என் னிதயம் பூரிக்கின்றேன்......

ஏகா :—மோஹன்! ஏன் இதற்குள் முடிவை எதிர்பார்க்கிருய்? கடவுள் கிருபை இருந்தால் நீயே விடுதலையாகலாமல்லவா!.......நான் ராஜத்தின் சம்மதத்தையறிந்தே அழைத்து வருகிறேன். ஆனல் அவளுடன் அதிகம் எதுவுமே பேசக்கூடாது. ஜாக்ரதையாய் நடந்துகொள்ளு.—என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

மோஹன் விதியின் வல்லமையை எண்ணிப் பெருமூச்சு விட்ட வண்ணம் முன்போலப் படுத்துவிட்டான். அவன் மனதில் பெரும் புயலும், இடியும், மின்னலும் ஒருங்கே எண்ணங்களாகத் தோன்றி அவன் இதயத்தையே பிளக்கின்றன. பழங்கதைகளை எல் லாம் எண்ணி மனம் புண்ணுகிறுன்.

மறு தினம் காலையில் மோஹனைப் பார்க்கக் கல்யாணியம்மாள் வந்தாள். இண்டர்வியூ அறையில் கல்யாணியம்மாள் மனம் பதற, தேகமே நடுங்க "அப்பா! மோஹன்! மோஹன்!" என்ற பெயரைத் தவிர வேறு எதுவும் அவள் வாயில் வரவில்லை; கதறிக் கொண்டே இருப்பதைக் கண்ட எந்த கல்மனம் படைத்தோருக்குத் தான் மனம் உருகாமலிருக்கும்.

'தாயே தெய்வம். தாயே ஜீவன். தாயே தன் வாழ்க்கையின் இன்பம்.' என்று எண்ணி இருந்த மோஹன் தாயின் கோரமான நிலைமையைக் கண்டதும் தாயின்மீதுள்ள கரை கடந்த ப்ரீதியினால் ஜெயில் படை சூழ நிற்கும் காவல் என்பதையும் மறந்து ஆவேசத்துடன் ஓடி வந்து "அம்மா! அம்மா! என்னுருயிர் அம்மா"…. என்று கதறியவாறு கல்யாணியம்மாளை இறுகத் தழுவிக்கொண்டு தேகமே குலுங்கக் குலுங்கப் புலம்பினான்.

இந்த செய்கை அங்குள்ளோரின் இதயத்தைத் துளாவி விட்டது. எல்லோரும் உஸ் உஸ். என்ற நீண்ட பெருமூச்சு விட்டு முகத்தைத் திருப்பிக் கொள்வோரும், கண்ணைத்துடைத்துக் கொள்வோருமாக ஆனார்கள். ஜெயிலருக்குக் கோபம் பொங்கி விட்டது. "நீ சாமானியக் கைதியல்லாது, ஓர் ப்ரபுவைக் கொலை செய்த பாதகன்—10000 ரூபாயைக் கொள்ளையடித்த கொள்ளைக்காரன் என்பதை மறந்து சட்டத்திற்கு மீறி ஓடிவந்து கட்டிக் கொண்டு அழுவது மிகவும் குற்றம்……இந்த ஸெக்ஷன்படி இது ஓர் குற்றமாகி விட்டது…ஊம்…இவனை உள்ளே கொண்டு போங்கள்." என்று கர்ஜித்தான்.

உடனே காவலாளிகள் மோஹனை இழுத்தார்கள். கல்யாணியம்மாள் கதறிய படியே அப்புறம் பிரிக்கப் பட்டாள். மோஹன் அடுத்த நிமிடம் தன் தனிக் கொட்டடியில் சேர்க்கப் பட்டான். என்னே பரிதாபம்! இந்த விஷயம் ஏகாம்பரத்தின் மனத்தை உருக்கியது "இந்நிலைமையில் ராஜத்தை எப்படி அழைத்து வருவது?" என்ற யோசனை உண்டாகி விட்டது. எனினும் தலைவிதி எப்

படி இருக்குமோ! ஒருகால் மோஹன் கூறியபடியே ஆய்விட்டதா யின் என்ன செய்வது? எது எவ்வித மிருப்பினும் அழைத்து வந்து காட்டி விடுவோம்'' என்று தீர்மானித்துக் கொண்டார்.

மறு தினமே மோஹனை வெளியூருக்குக் கொண்டு போக ஏற் பாடாகி விட்டதை யறிந்த ஏகாம்பரத்திற்கு "ஐயோ பாவம்! தான் கோரிய உருவத்தைப் பார்க்கவும் நேரமில்லாது போய்விடுமோ! என்ன செய்வது?'' என்று கவலை உண்டாகி விட்டது.

அன்று காலை 10 மணிக்கு மோஹனனை கைதிகளுக்குள்ள நிபந்தனைப்படிக்கு இரும்புக் கூண்டிற்குள் நிற்கச் செய்த பின்னர் ராஜத்தைஅவ்விடத்திற்கு அழைத்து வந்தனர். கதலித்தண்டுபோல் கட்டுமத்தாயும் பள பளப்பாயு மிருந்த தேகம் உருக்குலைந்து வாடித் துவண்டுபோய், முகம் விகாரப்பட்டுப் பார்ப்பதற்கு அடையாளமே தெரியாமலிருக்கும் ராஜம் மோஹனை அடைத்துள்ள கூண்டின் எதிரில் வந்து கூண்டை உற்றுக் கவனித்தாள்.

துயரப் பதுமையாய், பரிதாபம் நிறைந்த பார்வையுடன் கண் ணீர் ஆறுய்ப் பெருக நிற்கும் மோஹனைக் கண்டதும் தீயை மிதித் தவள் போலத் துள்ளினுள். இதயம் வெடித்துவிடும் போல விருக் கிறது......"மோஹன்! மோஹ்ன்!.........என்று தன் சோகம் நிறைந்த தொனியினல் கூப்பிட்டாள். மோஹன் ராஜத்தின் கேவல மான நிலைமையையும், உரு மாறிவிட்ட கண்ராவியையும் கண்டு சகிக்க முடியவில்லை......"அம்மணீ!......அம்மணீ!'' நான் ஆண்ட வன் மீது ஆணையாக குற்ற மற்ற நிரபராதி. கலியுகக் கர்ணனை விளங்கிய உங்கள் பிதாவை நான் இப்போதும் தெய்வமாகக் கொண் டாடுகிறேன்......நான் நிரபராதி.........என்று கண்ணீர் வழியக் கதறினன்.

ராஜத்தின் அபாரமான துக்கத்தின் உச்ச நிலைமையில் அவ ளுடைய மூளையே சுழல வாரம்பித்தது. மெல்லிய புஷ்பம் போன்ற இதயம் இந்த சம்பவமாகிய அக்கினியினல் துவண்டுபோய்...



"மோஹன்!" என்ற அழைப்போடு, நின்ற விடத்திலேயே சுவரில் சாய்ந்து ப்ரக்ஞை யற்றாள். அங்குள்ளவர்கள் "ஹா......என்ன கோரமான காட்சி" என்று உடல் சிலிர்த்தார்கள்......மோஹனின் நிலைமையை விவரிக்கவும் வேண்டுமா......

18-வது அதிகாரம்

மரணத் தீர்ப்பு—மங்கையின் தவிப்பு

உலகத்தில் மாயாவதாரனின் லீலா வினோதங்களின் விசித்திரத்தை யாரே அறியவல்லார்! சுகமே இன்னதென்று சொப்பனத்திலும் அறியாத மக்களை வேண்டுமாயினும் பொறுக்கி எடுக்கலாம். துன்பமே கண்டறியாத மக்கள் அகப்பட முடியுமா! ஒருபோது மில்லை. இன்பத்தை விட துன்பத்தையே மக்கள் அதிகமாக அனுபவிக்க நேருவதே மக்களின் பிறவியில் கண்கூடாகக் காணும் காட்சியாகும்.

துன்ப மறியாதிருந்த இன்ப நாட்கள் கழிந்து துன்பவாடை வீசவாரம்பித்தது முதல் அதே துன்பத்தில் துளைவதாகவே ராஜம் எண்ணி விட்டாள். ஆனால் இன்பத்தையே அறியாத மோஹன் இதற்கே நாம் பிறந்தோம் என்று உறுதியே கொண்டு விட்டான். கூண்டிலிருந்து அவனைப் பிரித்து இழுத்துச் செல்லும்போது துடி துடித்த மனத்தில் சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு விதமான உறுதியும் ஒருவிதமான சந்தோஷமும் உண்டாயின.

அது எதனால்? தன்னுடைய முடிவு சமீபித்து விட்டது என்றதை நினைக்கும்போது அவனுடைய விசனமாகிய பாசி விலகியது. அன்றே அவன் வசந்தபுரிக்கு மாற்றப் பட்டான். வசந்தபுரி ஒண்டிக் கொட்டடியில் போட்டுப் பூட்டி விட்டார்கள். இவனைப்போல மரண தண்டனையை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் கைதிகளையும் [illegible] தண்டனை கொடுக்கப்பட்டு நாளை எதிர் நோக்கிக் கொண் [illegible] கைதிகளையும் பார்க்கப் பார்க்க மோஹனின் தேகம் குன் [illegible] விட்டது. இத்தனை மனிதர்களும் கொலை செய்தவர் [illegible]ன்று நினைக்கும்போதே அவன் இதயத்தைத் தாக்கியது.

இத்தனை சோதனைகளுக்கு மத்தியில் கல்யாணியம்மாளின் உருவமும், ராஜத்தின் உருவமும் பளிச்சென்று தோன்றி அதனதன் சக்திச் சக்கரத்தை ப்ரயோகித்து ஒரு ஆட்டு ஆட்டி விட்டுச் செல்கின்றன.

வஸந்த புரியில் மோஹனுடைய கேஸ் நடக்கப் போகும் தேதி ஊரெல்லாம் பரவி விட்டது. துக்க சாகரத்திலிருக்கும் ராஜத்திற்கு இச் செய்தியறிந்ததும் மரண தண்டனை முதலில் தனக்குத்தான் நேர்ந்து விட்டதுபோன்று தபிக்கின்றாள். வஸந்தபுரிக்குச் செல்லலாகுமா வென்று நினைக்கும்போதே அன்று சிறைச்சாலையில் தன்னால் அக்கோரத்தைக் கண்டு சகிக்கமாட்டாது ப்ரக்ஞை யற்ற சம்பவம் நினைவிற்கு வந்துவிட்டது.

“அந்தோ! வழக்கின் முடிவுதான் தெரிந்திருக்கிறது. நாம் அந்த பயங்கரமான மரணத் தீர்ப்பைக் காதால் கேட்பதா! அதைக் கேட்டுச் சகிப்பதா! சீச்சீ....என்ன சோதனை! என்ன சோதனை....” என்று தனக்குள் புலம்பிய படியே இருக்கையில் சங்கரன் மிக்க விசனத்துடன் அங்கு வந்தான். அவன் கண்களில் நீர் ததும்பியது. அவனைக் கண்ட ராஜம் “என்ன சங்கரா! என்ன விசேஷம்...... கிழவி எப்படி இருக்கிறாள்?” என்று கேட்டாள்.

சங்க:—அம்மணி! கிழவியை எத்தனை சமாதானம் செய்தும் அவளுடைய மனது சற்றும் கேட்கவில்லை. நாள் நெருங்க நெருங்க அவளுடைய வயிற்றெரிச்சலும் சங்கடமும் அபாரமாகப் பெருகிக் கொண்டே வருகிறது. சதா அலற்றுகிறாள். “கிணற்றில் விழுந்து விடுகிறேன். குளத்தில் விழுந்து விடுகிறேன். என் வாழ்வை எல்லாம் த்யாகம் செய்து நான் வளர்த்த குழந்தைக்கு—என் செல்வ மோஹனுக்கு—தூக்கு தண்டனை விதிப்பது; அவனைத் தூக்கிலிடுவது. அதைக் காதால் கேட்டுச் சகிப்பதா! ஐயையோ பொறுக்க மாட்டேன்; பொறுக்க மாட்டேன்! இது நான் எத்தனை ஜென்மாந்திரங்களில் செய்த பாவமோ தெரியவில்லை. நான் இனி சகி
என்று கதறுகிறாள்.

ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வந்த பிறகும்

வது கண்ணுக்கு மருந்து போட்டுக் கொள்ள வேண்டுமென்று வைத்தியர் கூறினார். கிழவி ஒரு நாள் கூடப் போகவில்லை. சதா கதறியவாறு இருக்கிறாள். அதைப் பார்க்கவே மனம் சகிக்கவில்லை. என்ன செய்வது?'' என்றான்.

இதைக் கேட்கும்போதே சகல விஷயங்களும் ராஜத்தின் கண் முன்பு தெரிவதுபோல் தோன்றி கட்டு மீறிய கலக்கத்தை யுண்டாக்கிக் கண்ணீராகப் பெருகியது. பேதைப் பெண் பதில் பேசமாட்டாது தியங்கினாள். அச்சமயம் கிருஷ்ணன் வெகு கோபத்துடன் கண்கள் சிவக்க அங்கே வந்து சங்கரனையும் ராஜத்தையும் விழுங்கி விடுபவன் போல விழித்தான். நெற நெற வென்று பல்லைக் கடித்தான்.

சங்கரனை நோக்கி "அடே அனுகூல த்ரோகி! வஞ்சனைக்காரப் பதரே! என் பிதாவைக் கொன்ற பஞ்சமா பாதகனாகிய அச் சண்டாளனின் தாயாருக்கு நீ இத்தனை நாளாக ரகஸியமாய் உதவி புரியும் த்ரோகத்தை நான் கண்டு பிடிக்கவில்லை என்று நினையாதே! பாவீ! சமயல்காரப் பயலே! உன்னைக் குடும்பத்துடன் என் பிதா இத்தனை வருடங்கள் வைத்துக் காப்பாற்றியதற்கு அவரைக் கொன்ற வைரிக்கே நீ உதவி செய்வதானது அவர் எப்போது துலைவார் என்று எதிர்பார்த்ததுபோலாய் விட்டது. சீச்சீ! த்ரோகி! இனி இவ்விடத்தில் ஐந்து நிமிடங்கூட நிற்கலாகாது. இப்போதே இவ் வீட்டை விட்டுப் போய் விடு. ஊம்......இன்னும் அவள் முகத்தை என்ன பார்க்கிறாய்?

அடி புத்தி கெட்டவளே! பெற்ற தந்தையைக் கொன்றவனுக்காக அழும் மடத்தனமுள்ளவர்கள் உலகத்திலேயே இருக்கமாட்டார்கள். இதைக் கண்ட பிறர் கை கொட்டி நகைத்து ஏசுவார்கள். உனக்கு துக்கந்தான் இல்லை. வெட்கமுமா இல்லை? மானமுமா போய்விட்டது. உனக்கு எத்தனை துணிபு இருந்தால் இவனை ஏவி நீ அந்த கிழட்டுப் பிணத்திற்கு உதவ முன்வருவாய். சீச்சீ! வெட்கம்! வெட்கம்!.........இனி உன் தாண்டவம் பலிக்காது...... [illegible]ப் சங்கரா! போ; வெளியே போ!......போ...போ...மரியாதை [illegible]பா. கழுத்தைப் பிடித்துத் தள்ளும்படியாய் வைத்துக் [illegible]ாதே'' என்று தன்னதிகாரத்தை முற்றும் பார்வையிலும்

குரலிலும், தேக ஆட்டலிலும் காட்டிக் குதித்தான். அனியாயமான இந்த சம்பவத்தைக் கண்ட ராஜந்தான் என்ன பதில் கூறுவாள்? சங்கரன்தான் என்ன பேச முடியும்? கண்ணீர் பெருக சங்கரன் ராஜத்தை நோக்கினன்.

ராஜம்:—(சற்று பொறுமையுடன் பேசத் தொடங்கி) க்ருஷ்ணு! உன்னை இனி கேட்பாரின்றி நம் தந்தைதான் மறைந்து விட்டார். அவரோடு கடவுளும் மறைந்து விட்டார் என்று எண்ணி விட்டாயா! சத்தியம், தருமம், தயாளம் எல்லாம் மடிந்து விட்டனவா!

என்று முடிப்பதற்குள், கிருஷ்ணன் "சீச்சீ! முட்டாளே உன் திருட்டு வேதாந்தத்திற்குத் தலையாட்டவும், செவி சாய்க்கவும் நானும் தந்தையைப்போல மூடமல்ல. பேசாது கிட நாயே! யாரிடம் இனி வாலாட்டப் பார்க்கிறுய்? ஏண்டா! ஆடு திருடிய கள்ளன் போல விழிக்கிறுய். போ வெளியே!" என்று பின்னும் அதட்டினன்.

ராஜம்:—சங்கரா! உன் கை உனக்குக் கஞ்சி வார்க்கும். தொழில் தெரிந்த எவரும் பிழைக்க வகையுண்டு. தொழில் கஞ்சி வார்க்காது போகாது. முழு வயிறு இல்லை எனினும் கால்வயிற்றுக் காவது கஞ்சி வார்க்கும். உன்னை ஆதரித்த ப்ரபு மறைந்தார். இனி உனக்கு இவ்விடம் தகாது. நீ வெளியே செல்லு. அவரவர் விதிப்படி யாவும் நடக்கட்டும்; கண்ணீர் விடாதே! சங்கரா! உனக்கு இத்தனை நாள்தான் இவ்வீட்டில் பந்தம் இருந்தது.

இதற்குள் மரகதத்திற்கு இச் செய்தி தெரிந்ததும் ஓடி வந்தாள். ராஜம் மரகதத்தை நோக்கி "அம்மா! என்னைத் தாய் போல வளர்த்தாய். இதுவரையில்தான் நான் உன்னுடன் இருக்கப் பாக்யம் செய்தேன். இந்தா! இது என்னுடையது. இதைக் கேட்க யாருக்கும் அதிகாரமில்லை" என்று தன் புடவைகளில் இரண்டை எடுத்துக் கொடுத்தாள்.

அன்யோன்ய மாயிருந்த எவர்தாஞகட்டும் பிரிவ அந்த துக்கமும் உணர்ச்சியும் ஓர் தனித்ததல்லவா! ராஜத்தி

புழுங்கியது. சங்கரன் எத்தனையோ சொல்லியும் கிருஷ்ணன் செவியில் வாங்காததோடு "அடேய்! சங்கரா! அந்தக் கொலைகாரனுக்கு நீ உதவி புரிவதால் அக்கொலையில் நீயும் பணத்தாசைக்காக சம்பந்தப் பட்டிருப்பயோ என்று என் மனம் இப்போதுதான் நினைக்கிறது" என்று ஒரே போடு போட்டான்.

இவ்வார்த்தை எல்லோருடைய மனத்தையும் தாக்கியது. "ஆ......சின்ன எஜமான்! ஓடிப் போ என்றால் இந்த கழுதை போய் விடுகிறான். இத்தனை பெரிய மலையைத் தலையில் புரட்டியனுப்பாதீர்கள்" என்று கண்ணீர் பெருகக் கூறிக்கொண்டே மரகதமும் சங்கரனும் ராஜத்தினிடம் விடை பெற்றுக்கொண்டு, தங்கள் ஓட்டை உடைசல் சாமான்களையும் எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

கிருஷ்ணன் இன்னொரு பாரமும் குறைந்ததாகப் பெருமூச்சு விட்டு ஆயாஸம் தீர்த்துக் கொண்டான். பழைய வேலைக்காரர்களில் ஒவ்வொருவராக செலவு பெற்றுச் சென்றுவிட்டார்கள். புதிதாக ஆட்களை தம்மிஷ்டப்படி தன் சகாக்களுடன் தயார் செய்து விட்டான்.

பத்திரிகாலயத்தின் கதியோ, பத்திரிகையின் வளர்ச்சியோ கூறத்திறமில்லை. இத்தனை வருடங்களாய் வெகு மேன்மையாயும் ருசியுள்ள முக்யமான விஷயங்களுடனும் விளங்கிய பொது ஜன ஆதரவு பெற்றிருந்த நாட்கள் மறையத் தொடங்கின. தடி எடுத்தவர்களெல்லாம் வேட்டைக்காரர்கள் என்பது போன்று பேனா பிடிக்க யோக்யதை யற்றவர்களின் எழுத்துக்களெல்லாம் பத்திரிகையில் நிறைய வாரம்பித்தன.

காதல் கட்டுரைகளும், சினிமா கட்டுரைகளும்,உப்பு சப்பற்ற பத்திரிகையின் அழகையும், பழைய பெருமையையும் சிதைக்கும் பிணங்களாக அமைந்தன. கட்டுரையாளர் உயர்ந்த கருத்துக் களடங்
டுரைகள் எழுதினால் சிறிது சோபிக்கும். உயர்ந்த கட்டுரை
க்கு தர்மலிங்கம் தக்காருக்குத் தக்கபடி பணங்கொடுத்து
இந்த தர்மப்ரபுவின் ஆட்சியில் காலணா கொடுக்க மனம்

வராது நிறுத்தி விட்டதால் உயர்ந்த எழுத்தாளர்களும் விலகிக் கொண்டார்கள்.

கற்றுக் குட்டிகளும், பிறர் எழுதியதைக் காப்பி யடித்துத் தன் பெயரால் வெளியிட்டுக் கொள்ளும் ஜம்பக்காரர்களும், வெள்ளைக் காகிதத்தில் கருப்பு மையினால் பக்கத்தை வளவளவென்று நிரப்பும் விளக்கெண்ணெய் எழுத்தாளர்களும் நிரம்பி விட்டதனால் பத்திரி கையின் வளர்ச்சி திடீரென்று இறங்கி விட்டது.

வெளியூர்களில் 100 பத்திரிகை வாங்கும் ஏஜெண்டுகள் ஒரு ஸைபரை எடுத்து விட்டார்கள். உள்ளூரிலும் பத்திரிகையின் மதிப்பு அடியோடு குலைந்து போய் விட்டது. "ஊம்......தர்மலிங்கம் மறைந்ததோடு பத்திரிகையின் புகழும் மறைந்தது. உயர்ந்த எழுத் தாளர்களின் பெயரே காணவில்லை. ஏதோ என்றும் கேட்டிராத புதிய-புதிய-பெயர்கள் வருகின்றன. புதிய பெயராயினும் தொலை யட்டும்; விஷயம் நன்றாக இருந்தால் தேவலை. உப்பு சப்பில்லாதது ஏனையா அதற்குக் காசு கொடுக்க வேண்டும்?" என்று பொதுமக்கள் பேசிக்கொள்ள வாரம்பித்தார்கள்.

இந்த தாழ்வும் இழிவும் புதிய அதிகார தோரணையில் தன் னரசு புரியும் கிருஷ்ணனுக்கு எப்படித் தெரியும். மதங்கொண்ட யானையைப்போல அதிகாரம் செய்துத் திரிவதையே பெரிய கண் ணியமாகக் கருதினானே யன்றி, தன் பிதாவின் முயற்சியினால் தேடிய புகழும், பெருமையும், மங்கிப்போகிறதே என்கிற உணர்ச்சியே அடி யோடு அற்று விட்டது.

வெகு நாட்களாக பாடு பட்டுச் சேகரித்த புகழுக்கே ஹானி தேடும் மனிதன் தன் சகோதரியை எப்படி நடத்துவான் என்று கேட்க வேண்டுமா! ராஜம் குன்றிப்போய் நோயாளி போலாகிக் கொண்டே வருகிறாள். வீட்டில் உள்ள இம்சையோ சகிக்க முடிய வில்லை. மனமோ கொந்தளிக்கும் துக்கச் சுழலில் தத்தளிக்கின்[illegible]

சங்கரன் இருந்த வரையிலாவது ஏதாவது வெளி [illegible]
தெரிய வந்தன. அவன் சென்றுவிட்ட பின்னர் ராஜத்தி[illegible]

சிறைச்சாலை போலாகிவிட்டது. கிருஷ்ணனும் அவன் கோஷ்டியும் பேசிக்கொள்வதிலிருந்து கேஸ் முற்றும் விசாரணையாகி விட்டது. ஜட்ஜ்மெண்டு (தீர்ப்பு) நாளைக்குக் கூறப்போவதாகத் தெரிந்தது.

அந்தோ! பரிதாபம்! தன் சொந்த வீட்டிலேயே...தன்னுடன் பிறந்த அண்ணனாலேயே தான் அடிமைப் பட்டுக்கிடப்பதென்றால் அவளுடைய சங்கடத்தை அளவிட்டுக் கூற முடியுமா?'' நாளைய தினம் நீதிபதி என்ன தீர்ப்பு கூறுவாரோ! கிழவி எப்படி இருக்கிறாளோ! ஹா......அந்தோ!......மோஹனின் உயிர் என்ன தபிக்கிறதோ! ஒருகால் மரண தண்டனை என்ற உடனே உயிர் போய் விடுமோ! ஐயோ!......கருணாநிதே! நிரபராதிகளைக் காக்க நீ உன் கருணையை எங்கே கடலில் போட்டுவிட்டாயா!.......

ஹா!......நான் செய்துள்ள பாபத்திற்கு எல்லை இல்லை. இன்னும் தேடிக்கொள்ளவா கடவுளை நிந்திக்கிறேன்.'' என்று தனக்குள் தவித்து உருகுகின்றாள். இவைகளை நினைக்கும்போதே இவள் இதயம் வெடித்துவிடும் போலாய் விடுகிறது. 'நாளை என்ன விஷயம் வருமோ!' என்ற ஏக்கத்துடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ணனும், அவனுடைய சகாக்களும் வஸந்தபுரிக்குச் சென்று விட்டார்கள். ராஜம் தன்னந்தனியே அனலிடை மெழுகென உருகிக் கொண்டே இருந்தாள். தன் ப்ராணனை விட்டு விடவும் துணிகிறாள். அடுத்த நிமிடம் அது மகா பாபமல்லவா என்று தன் தந்தையும், உபாத்தியாயரும் போதித்ததை நினைத்து மனந்தேறுகிறாள்.

இம்மாதிரி அன்று பொழுது துலைய மறு தினம் உதயமாயிற்று. நிமிடத்திற்கு நிமிடம் அங்கு என்ன நிலைமையிலிருக்கிறதோ என்ற திகிலே திக்கு திக்கு என்று அடித்துக் கொள்ளுகிறது. எங்கும் அந்தகாரம் குடிகொண்டு விட்டது. தானும் வஸந்தபுரிக்கு ஓடி [illegible] என்று நினைத்தாள். அடுத்த விநாடியே அந்த பயங்[illegible]னதில் நினைக்கும்போது அதைக் கண்டு சகிக்க முடியாது [illegible]சையை அடக்கிக் கொண்டாள்.

தாமரையிலை நீர்த்துளி போன்று தத்தளித்துக் கொண்டிருக்கையில் வீதியில் பத்திரிகை விற்கும் பையன்கள் உரத்த குரலில், "கலியுகக் கர்ணனாய் விளங்கிய தர்மலிங்கம் ப்ரபுவைக் கொலை செய்த மோஹறனுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்ட வழக்கு விவரம் அடங்கிய "நீதி சாரம்" பத்திரிகை காலணா! காலணா" என்று கத்தும் குரல் கேட்டதுதான் தாமதம் ராஜம் அப்படியே வெட்டிச் சாய்த்த மரம் போல "ஹறா ...மோஹறன்!......மோஹறன்....என்று கதறிய படியே மூர்ச்சையாகி விழுந்து விட்டாள். அனாதைப் பிணம் போன்று கிடக்கும் ராஜத்தைக் கவனிப்பார் உண்டா?

இரவு சுமார் எட்டு மணிக்கு கிருஷ்ணன் முதலியவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வரும்போதே ஒருவருக்கொருவர் 'அடேய்! கடவுள்! கடவுள்! என்று அடித்துக் கொள்கிறார்களே! அந்த கடவுள் உண்மையில் இருப்பது இன்று தாண்டா தெரிந்தது. சதிகாரப்பாவி, கொலைகாரச் சண்டாளன் தொலைந்தான். இன்றுதான் என் மனம் பூராவும் நிம்மதியாயிற்று" என்றான் ஒருவன்.

க்ருஷ் :—(தன்னையும் மீறி ஒரு விதமான உணர்ச்சியுடன்) என்னமோப்பா எனக்கு என்னை யறியாது ஏதோ வேதனை செய்கிறது. இன்ன தென்று கூறத் தெரியவில்லை.—என்று குழம்பிய வாறு கூறினான்.

இதற்குள் நாகலிங்கமும், மற்றையோரும் "கிருஷ்ணா! ஏதேது! என்னமோ வேதாந்திபோல் பேசுகிறாயே! வினை விதைத்தவனுக்கு தினை யறுவடை செய்ய முடியுமா? வினையைத்தான் அறுவடை செய்ய வேண்டும். அடேயப்ப! 10000 ரூபாய் இலேசானதா! அதோடு ஒரு பெரிய தர்மப்ரபுவின் உயிர் சாமான்யமானதா! எத்தனை சுலபமாக அவைகளைப் போக்கினானே! அதற்குத் தக்கபடித் தூக்கு மரத்தில் தொங்கப் போவது வியப்பா! போடா, பயித்தியக்காரா!" என்று தட்டிக் கொடுத்தார்கள்.

இதற்குள் மீண்டும் பாசி மூடிவிட்டதால் தண்ணீரு... பாலைப்போல் அவர்களுடனேயே சேர்ந்து விட்டான்... செய்தியை உரைக்க கிருஷ்ணன் வெகு வேகமாக ராஜத்...

குச் சென்றான். ராஜம் அப்போதும் முன்பு மூர்ச்சையாகியது தெளியாது கீழே தரையில் தாறுமாறாக விழுந்து கிடக்கிறாள். வெயர்வை வெள்ளமாகி அவள் சேலை முற்றும் நனைத்ததுடன் கீழேயும் வழிந்தோடியது. ஈயும் கொசுவும் மொய்த்துக் கொண்டு விட்டன.

இந்த கோரமான பரிதாபக் காட்சியைக் கண்டு எல்லோரும் முதலில் திடுக்கிட்டார்கள். கிருஷ்ணன் ராஜத்தைத் தூக்கிக் கட்டிலில் படுக்கவைத்து மின்சார விசிறியைத் திருப்பினான். நாகலிங்கம் ஓடி ஐஸ் வாங்கி வந்தான். வேறொருவன் வைத்தியரை அழைத்து வந்தான். வைத்தியர் வந்து பார்த்து விட்டு "உடம்பில் ஒரு விதமான கோளாறும் இல்லை. ஏதோ தாங்க வியலாத மன அதிர்ச்சியினால் ரத்த ஓட்டம் அதிகரித்து, மூளைக் கொதிப்படைந்து மூர்ச்சையாகி இருக்கிறது. ஐஸை தலையில் வையுங்கள். அதையே வாயிலும் மெல்ல போடுங்கள். ஓர் தாதி அருகிலேயே இருந்து இவைகளைச் செய்து கவனிக்கவேண்டும். இந்த அதிக வேகத்தினால் இதயம் வெடித்தாலும் வெடித்து விடும் ஜாக்ரதை" என்று கூறி ஒரு ஊசி ஏற்றிவிட்டுச் சென்றார்.

உடனே ஒரு தாதி வந்து மேற்படி முறைகளைக் கவனித்து வந்தாள். பின்மாலை பொழுது புலரும் முன்னர் ராஜம் கண் திறந்தாள். சற்று தெளிவு உண்டாகியது. "மோஹன்!.........மோஹன்!.........உனக்கா மரண தண்டனை!.......நீயா தூக்கு மரத்தில் தொங்கப் போகிறாய்?......மோஹன்.......மோஹன்...... என்று வாய்க் குழறக் கூறி சுற்று முற்றும் பார்த்தாள். மீண்டும் கண்ணை மூடினாள். பின்னும் சற்று நேரத்தில் கண்ணை விழித்த போதுதான் தன் பக்கலில் ஒரு தாதியும், நாகலிங்கமும், கிருஷ்ணனும் சுற்றி உட்கார்ந்திருப்பதையும், தான் கட்டிலில் கிடப்பதையும் அறிந்தாள்.

...ன பழைய கதைகள் சிறிது சிறிதாக நினைவிற்கு வந்தன. ஆத்திரமும் தலை தூக்கி நின்றன. சடக்கென்று ஐஸ் தூக்கி எறிந்து விட்டு அப்புறம் திரும்பிக்கொண்டு

"அம்மா! எனக்கொரு உடம்பும் இல்லை. நீங்கள் போங்கள்....... என்னைச் சுற்றி யாரும் துக்கம் காக்கவேண்டாம். என்னைப் படைத்த ஈசன் என்னைக் காக்கச் சித்தமாயிருக்கின்றான்........எல்லோரும் எழுந்து போங்கள்" என்று ஆத்திரத்துடன் கூறினாள்.

கிருஷ்ணனுக்கு இவ்வார்த்தைகள் சற்று சுறுக்கென தைத்தன. "ராஜம்! உன்னைப் படைத்த ஈசன் உன் மோஹனைக் காத்து விட்டான். உன்னையும் காக்காது போவானே!... ...உம்......... மூடப் பெண்ணே! நம் தந்தையின் உயிரை விட அந்தச் சண்டாள கொலைகாரனின் உயிர் அத்தனை வெல்லமா!"..... என்று கேலியாகக் கூறினான்.

ராஜம் திரும்பிப் பாராமலேயே........"விநாசகாலே விபரீத புத்தி" என்பது பொய்யாகாது. எனக்கு என்னுடைய உயிரே வெல்லமில்லை. இன்னிமிடமும் தயாராகவிருக்கிறேன். எனக்கு சத்தியமும், நியாயமும், தருமமும், மனித ஜென்மாவுக்கு அத்யாவச்ய மான ஒழுக்கமும், மானமும்தான் வெல்லம். அந்த வெல்லத்தைக் கரைய விட்டுவிட்டதற்காகத்தான் என் மனம் தத்தளிக்கிறது. வீண் பேச்சுக்கள் வேண்டாம். எல்லோரும் வெளியில் போகலாம்...... என்று சிள்ளென்று கூறினாள்.

உடனே கிருஷ்ணன் அபாரமான ஆத்திரத்துடன் "நாகலிங்கம்!.......நர்ஸ்...எல்லோரும் எழுந்துபோங்கள்" என்று கூறியனுப்பிவிட்டுத் தானும் போய்விட்டான். ராஜம் படுக்கையை விட்டு எழுந்திருக்கவே இல்லை. படுக்கையுடன் படுக்கையாகப் புலம்பியவாறு கிடந்தாள்.

அந்த தாதி வரும்போது கையில் கொண்டுவந்த பத்திரிகையை அங்கேயே போட்டுவிட்டுப் போய்விட்டாள். ராஜம் பிற்பகல் அந்த பத்திரிகையைப் பார்த்ததும் அதை எடுத்துப் படித்தாள். கொட்டை எழுத்துக்களில்

மோஹனுக்கு மரண தண்டனை

என்ற தலையங்கத்தைப் பார்த்ததும் மனம் பதறியவாறு [illegible] விஷயத்தையும் படிக்கலானாள்.

இன்று கூடிய செஷன்ஸ் கோர்ட்டு வழக்கின் முடிவைக் கண்ணால் கண்ட எவரும் கண்ணீர் உதிர்க்காமலிருக்க முடியாது. குற்றவாளி பரம ஏழையாகையினால் அவர் பக்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள திக்கில்லை என்ற விஷயத்தைக் கேட்க மிக்க விசனமாயிருக்கிறது. இவ்வழக்கின் ஜோடிப்பு வெகு கோர்வையாயும், பொருத்தமாயும் அமைந்திருப்பதைப் பார்த்தால் குற்றவாளி குற்றம் செய்யவில்லை என்று கூற சற்றும் இடமே இல்லை.

குற்றவாளியின் சாந்தமான களங்கமற்ற முகத்தை நோக்கினால் இவரா குற்றம் செய்தவர் என்று வியக்காமலிருக்க முடியவில்லை. தர்மலிங்கத்தைச் சுட்ட துப்பாக்கி முதல் அவர் வீட்டிலேயே கிடைத்துவிட்டதால் அதற்குமேல் சாட்சி தேடவும் அவசியமில்லை. விதி என்பது இதுதான் போலும். வழக்கு வெகு முக்யமானதால் பல கேள்விகளும், பதில்களும் சரமாரியாக நடந்ததைப் பற்றி வியப்பில்லை.

ஆனால் ஒரே ஒரு சம்பவம்—ஒரே ஒரு காட்சி—அந்த நீதிபதியின் மனத்தையும் உருக்கியது. கண்களை அவர் கைக்குட்டையால் துடைத்ததை என் கண்ணாறக் கண்டேன். என்னே பரிதாபம்!—என்னே கோரம்! நீதிபதியின் தீர்ப்பில் "மோஹன் குற்றவாளிதான். ஆகையினால் அவனுக்கு மரண தண்டனை விதிக்கிறேன்." என்று கூறிய உடனே கோர்ட்டிலிருந்த அத்தனை பெயர்களும் திடுக்கிட்டு "ஹா!"...வென்று அலறினார்கள்.

ஆனால், அந்த ஏழைப் பரதேசியான குற்றவாளி என்ன செய்தான்! அலறினானா! பெரிதாகப் புலம்பினானா! மூர்ச்சித்தானா! ஒன்றுமில்லை. இரு கைகளையும் சிரமேல் கூப்பினான். … சோகச் சிரிப்பு கடகடவென்று சிரித்தான். கண்கள் மட்…டு வெள்ளம்போலப் பெருக்கெடுத்தன. "ஜகத்… ஜகன்மாதா! என்னுடைய தாயை அதிக நாள் …படாதீர்கள். என் அன்னையை உங்கள் பாத கமலங்

களில் சேர்த்துக்கொள்ளுங்கள். என் ஜீவநாடி அவள்தான். அவளுடைய பிணியைப் போக்கவே நான் இச் சதியாலோசனையின் சூட்சிகளை யறியாது நோட்டுக்களைக் கையில் வாங்கினேன். என் மனமறியச் செய்த குற்றம் உன்மீதாணையாக இதுதான்......இன்னுமொரு ஆத்மாவுக்கு என்னுடைய நிரபராதித்தன்மையைக் கூறி விடு......என்று உரத்த குரலில் கூறினன்.

இதற்குள் நீதித்தலம் துக்கமாய் விட்டது. ஆகாயத்தில் இடியும் மின்னலும் மழையும் திடீரென்று உண்டாயின அதே போல அங்கிருந்த ஒவ்வொருடைய இதயத்திலும் வேகமான காற்றும் இடியும் கண்ணால் மழையும் பொழிந்துவிட்ட காட்சியை என்போன்ற துர்ப்பாக்கியமுள்ளவர்கள் பார்த்துப் புலம்ப நேரிட்டது. என்னே கோரமான காட்சி! என்னே பரிதாபம்! அடுத்த நிமிடம் மோஹனை போலீஸார் அழைத்துச் சென்றுவிட்டார்கள். அவனுடைய பரிசுத்தமான சாந்த முகம் இன்னும் கண்முன்பு தாண்டவமாடுகிறது. உலகமே இவ்வளவு தான் "—ஒரு நிருபர்

மேற்கண்டதை வரையும் நமது கரமும், பேனவும் நடுங்கி கண்கள் மடை திறந்துவிட்டன வென்றால் ராஜத்தின்பரிதாபத்தையும், கட்டு மீறிய விசனத்தையும் கூறவேண்டுமோ! "இன்னெரு ஆத்மாவுக்கு என்னுடைய நிரபராதித் தன்மையை விளக்கு" என்ற மோஹனின் வாக்யம் எனக்கல்லவா கூறியிருப்பது? மோஹன்! மோஹன்!......இன்னெரு ஆத்மாவுக்கு நீ நிரபராதி என்று விளங்காமலிருந்தாலல்லவோ நீ அதைக் கடவுளிடம் கோரவேண்டும்...... உன் தாயாருக்கு வேண்டியதை எனக்கும் வேண்டிக்கொள்ளலாகாதா!.........மோஹன்......மோஹன்" என்று புழுபோலத் தும[illegible] தாள். கோர்ட்டின் காட்சியும், மோஹனின் உருவமும் அப்ப[illegible] கண் முன் படக்காட்சிபோலத் தோன்றியதால் அதைப்[illegible] வாறு அதிலேயே லயித்துப் போய்ப் பதுமைபோலாகி[illegible]

19-வது அதிகாரம்.

கதிகலங்கிய வனிதை—அதிகார தேவதை

உலகத்தில் மக்களிடையே வழங்கி வரும் "தலைக்கு மிஞ்சிய தண்டனை இல்லை. உடைக்கு மிஞ்சிய தரித்திரமில்லை' என்ற பழமொழிப் படிக்கு அத்தகைய நிலைமை ஏற்பட்டுவிட்டால் அதையனுபவிப்போருக்கு அதை விட வேறு என்னதான் வேண்டும்! உலகமே முழுகிவிட்டதாகவன்றோ தோன்றும்?

இன்னிலைமையிலுள்ள மோஹனுடைய மன நிலைமையை வர்ணிப்பதே சாத்யமன்று. தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட உடனே அவனை அத்தகையோருக்கென உள்ள ஓர் தனிக் கொட்டடியில் போட்டுப் பூட்டிவிட்டார்கள். சட்டப்படிக்கு தூக்கு தண்டனை விதித்தவர்களுக்கு அவர்களை தூக்கிலிடும் பரியந்தம் அவர்கள் என்ன ஆகாரம் விரும்புகிறார்களோ, அவர்கள் யார் யாரைப் பார்க்க விரும்புகிறார்களோ அதை மட்டும் சர்க்கார் செய்யவேண்டும். அதே போல மோஹனனை உனக்கு என்ன ஆகாரம் வேண்டும் என்று கேட்டார்கள்.

மோஹன் துக்கச் சிரிப்பு சிரித்தபடியே "எனக்கு ஆகாரமா? புதிய ஆகாரமா! உம்....—ஒன்றும் வேண்டாம். எதைக் கொடுத்தாலும் போதும்." என்றான். நீ யாரையாவது பார்க்கவேண்டுமா என்றதற்கு "ஆம்........கடவுளின் ரூபத்தை மட்டும் பார்த்தால் போதும். அதைக் காட்ட உங்களால் முடியாது. ஆகையினால் ...ன் ஒருவரையும் பார்க்கவேண்டாம். என் விதி என்முன் சதா ...வமாடி தரிசனம் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. ... பார்த்துக்கொண்டே இருந்தால் அதன் ஆட்சியை முடித்து

விடும், இதுதான் வேறு ஒன்றும் வேண்டாம்.'' என்று வெறுப்பாயும் வேதாந்தமாயும் கூறிவிட்டதால் அவர்கள் பேசாது போய் விட்டார்கள்.

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்திற்கு மட்டும் மோஹனைப் பார்க்க முடியாத விசனம் அவரை யறியாது பொங்கியது. அவர் இரண்டு தினங்கள் சென்று, மோஹனிடம் வந்தார். மோஹன் அச்சமயம் ஓர் உருக்கமான தாயுமானவர் பாடலைப் பாடி தோத்திரம் செய்து கொண்டே இருந்தான்.

இன்ஸ்பெக்டர் கொட்டடியின் வெளியில் நின்றுகொண்டே இந்த பாடலைக் கேட்டு மனமுருகினர். பிறகு மெல்லிய குரலில் "மோஹன் ! மோஹன் !'' என்று அழைத்தார். உடனே மோஹன் வெகு மரியாதையுடன் எழுந்து வந்தனம் செய்துக் கண்ணீர் பெருகத் தலை குனிந்து நின்றான்.

ஏகாம் :—மோஹன் ! விதியின் கூற்று இத்தனை கொடுமையாக விருக்கும் என்று நான் நினைக்கவில்லை. என்ன செய்யலாம்......... நானோ உத்யோகஸ்தன். அதிலும் போலீஸ் உத்தியோகஸ்தன். நான் அடிக்கடி உன்னை வந்து பார்ப்பதும் என் தொழில் முறைக்கு மிகவும் விரோதம். அப்படி இருந்தும் உன்னுடைய.........ராஜத்தி னுடைய பரிதாபம் என்னையறியாது என்னை இங்கு வரும்படித் தூண்டுகிறது. மோஹன் ! நீ உன் தாயாரையாவது.......ராஜத்தை யாவது பார்க்க விரும்புகிறாயா ! அதோடு ஜெயிலில் வந்த பிறகும் தர்ம அப்பீல் செய்து கொள்ள இடமிருக்கிறது. அம்மாதிரி நீ செய்கிறாயா ?—என்று கேட்டார்.

மோஹன் :—ஐயனே ! எனக்கு தருமம் தலைகாப்பதாயின் அன்றே காத்திருக்கும். தருமமே உதவி புரிய வந்ததுபோல உதவி யைக் காட்டிற்றே என்று மனமகிழ்ந்து நடுநிசியில் என் தாயின் பொருட்டு ஓடினேன். தர்மம் என்னைத் தலைகாத்ததா ! படு குழி லல்லவோ என் கர்மம் தள்ளச் செய்தது. அந்த தர்மலிங்க ப் தர்மமாவது என்னைக் காத்ததா! நான் ஒரு அப்பீலும் செ ஐயோ !....... நான் ஒருவரையும் பார்க்கவும் விரும்பவில்

ளைப் பார்க்கும் அந்த இரு ஆத்மாக்களும் புழுவெனத் துடிக்கும் கோரத்தை நான் சகிக்க மாட்டேன்.........வேண்டாம்.........வேண்டாம்.........என்னை இக்கதியில் என்னுயிர் போன்றவர்கள் கண்டு கதற வேண்டாம்.

ஐயா! இப்பாவியை இனி தாங்களும் அடிக்கடி வந்து சந்திக்க வேண்டாம். என் பாழும் விதியின் நிழல் தங்களையும் தாக்கி விடுமோ வென்று பயமாயிருக்கிறது.......பெரியவரே!......தாங்கள் ஒருகால் என்.... ...இன்பவல்லியை—ராஜலக்ஷ்மியைக் கண்டால்—நான் ஒருவித கலக்கமும் இன்றி தூக்கு மரத்திற்குச் சித்தமாயிருப்பதாய் தெரிவியுங்கள். நான் அறிந்து ஒரு குற்றமும் செய்யவில்லை. கடவுளால் உண்டாக்கப்பட்டு என்னால் தடுக்க முடியாத பரிசுத்தமான காதலை யடைந்தது ஒருகால் பெருங் குற்றமாயிருக்கலாம். அதன் பலனுக்கு இந்த தண்டனையை மனமார ஏற்பதாய்க் கூறுங்கள்.

என்னுருயிர் அன்னையைக் கண்டால் அவளைத் தேற்றி நல்மொழி கூறுங்கள். கடவுளை பஜிக்கச் சொல்லுங்கள். அநித்யமான மக்கள் மீது வைத்த மோகத்தை அறவே ஒழிக்கச் செய்யுங்கள். இதான் என் கடைசி வேண்டுகோள்............என்று கூறும் போது அவன் கண்ணில் வழிந்தோடும் கண்ணீர் கீழே பல துளிகளாய் சிந்தின.

ஏகாம்பரத்திற்கு அதற்குமேல் அங்கு நிற்கச் சகிக்கவில்லை.... "மோஹன்!.........நீ கட்டாயம் ஜெயில் ரயிட்டரையும்.......ஜெயிலரையும் அழைத்து ஒரு அப்பீல் செய்து பாரு. ஜெயமானால் ஆகட்டும். இல்லையேல் தலைவிதிப்படியிருக்கவே இருக்கிறது. நான் சொன்னதாகச் சொல்லாதே........ ..நீ இதைத் தடுக்காதே....என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

அவருடைய மனம் இந்த விஷயத்தில் இத்தனை இரக்கங் ...தன் உண்மையை அவராலேயே அறியமுடியவில்லை.......... ...படி இருக்கிறாளோ; அவளைப் பார்க்க வேண்டுமென்று ...து. ஆனால் இச்சமயம் அவளை எப்படிப் பார்ப்பது... ....

என்ற அச்சமும் உண்டாகியது.........எனினும் பார்க்க வேண்டுமென்ற ஆவலே தலை தூக்கி நின்றதால் ராஜத்தின் வீட்டிற்கு வந்தார்.

ராஜம் கட்டிலோடு கட்டிலாய் உலர்ந்துபோய் உருவே தெரியாது மாறுதலடைந்து தேகம் முற்றும் பாச்சையைப் போல வெளுத்து கட்டிலில் படுத்திருந்த காட்சியைக் கண்ட ஏகாம்பரம் அப்படியே இடிந்துபோய் விட்டார்.

"நான் வந்திருப்பதை அவளுக்கு எப்படி அறிவிப்பது, என் வரவை அவள் இனி வெறுப்பாளன்றோ! என்றால் என்ன உதவி இப்பேதைக்குக் கிடைத்தது. அந்தோ! இவளுடைய அலங்கோலத்தைக் கண்டு சகிக்கக் கூட வில்லையே! ஆஹா!......அன்பென்றால்.... ..காதலென்றால் இது வல்லவோ காதல்.....இத்தகைய அன்பு வெள்ளத்திற்கு யாரால்தான் அணைபோட முடியும்?' என்று நினைத்தபடியே உற்று நோக்கினார்.

கட்டிலின் மீது ராஜத்தின் பக்கத்தில் தர்மலிங்கத்தின் புகைப்படமும், மோஹனின் புகைப்படமும் வைத்திருக்கின்றன. அவைகளையே உற்று நோக்கிக் கண்ணீர் பெருகியவாறு படுத்திருக்கிறாள். சற்று நேரத்திற் கொருமுறை இரு படங்களையும் எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு மார்போடணைத்துக் கொள்கிறாள். தந்தையின் படத்தை நோக்கி...''உம். நீர் செத்த பிணம்....நான் சாகாப் பிணம்... மோஹனின் படத்தை நோக்கி "என் துரையே! என்னின்பவடிவே... சாந்தகுண சீலா!.......உத்தமா.......நீ சாகப்போகும் பிணமா........ ஹா.......உனக்கா தூக்கு தண்டனை........உனக்கா மரண தண்டனை! உன்னையா தூக்கிலிடப் போகிறார்கள்?''........என்று வாய்விட்டுக் கூறி, கட்டு மீறிப் புலம்புகிறாள்.

ஏகாம்பரத்திற்கு இந்த கண்ராவியைக் கண்டு சகிக்க மு[illegible] யாது கண்ணீர் பெருகி விட்டது. மெல்ல கட்டிலினருகில் [illegible] மெல்லிய குரலால் "ராஜம்!............ராஜம்!''......[illegible] அழைத்தார்.

ராஜம் கண்களில் பெருகும் நீருடன் எழுந்து ஏகாம்பரம் நிற்பதைப் பார்த்தாள். அவளால் துக்கம் சகிக்கவே முடியாது பொங்கி வந்து விட்டது. அடைத்த தொண்டையின் சப்தத்துடன் "ஐயா!.......என் வாழ்க்கையில் இடி விழுந்து விட்டதே! யார் செய்த புண்ணியத்தினாலாவது அவர் தப்புவார் என்று எண்ணினேனே! அதுவும் தீர்ந்துவிட்டதே——காலனிடம் அவரைக் கண்ணார அனுப்பும் நாளை எதிர் நோக்கும் விதியன்றோ கிட்டி விட்டது. எனக்கு விமோசனமில்லையா! எனக்கோர் வழி இல்லையா?—என் பிதாவைக் கொன்ற பாதகர்கள் என்னையும் கொன்றுவிடலாகாதா ......இன்ஸ்பெக்டர்வாள்!...... இனிமேல் நான் என்ன செய்வேன்?" என்று கதறிப் புலம்பியபடியே அங்கிருந்த மேஜையின் மீது குப்புற விழுந்தாள்.

தேகமோ குலுங்குகின்றது. ஏகாம்பரத்திற்கு நிலையே கலங்கி விட்டது. கடினமான சித்தத்தை வகிக்க வேண்டிய போலீஸ் உத்யோகத்திலிருக்கும் அவர் மனமே இளகி பதில் பேசமுடியாது தத்தளித்து விட்டது. "ராஜம்.......ராஜம்" என்று கூப்பிடுகிறாரேயன்றி அதற்குமேல் பேச வாய் எழவே இல்லை. கண்ணில் கைக்குட்டையை மறைத்துக்கொண்டு புலம்புகிறார்.

சிறிது நேரம் மவுனமே குடி கொண்டிருந்தது. ராஜம் மேஜையின் மீதிருந்து தலையை நிமிர்த்தினாள். பித்துப் பிடித்தவள் போல விழித்தவாறு "ஐயா! மரண தண்டனை கொடுத்தபோது என் அன்பான மோஹன் எப்படி இருந்தார்........என்ன சொன்னார்........ தாங்களும் அங்கிருந்திருப்பீர்களல்லவா.......அதைக் கூறுங்கள்...... என்று கண்ணீர் வடியக் கேட்டாள்.

ஏகாம்பரத்திற்கு இக் கேள்வி திடுக்கிடச் செய்தது. அந்த கோரமான சம்பவத்தை எவ்விதம் கூறுவது? அதைக் கேட்டு இன்னும் துடிப்பாளன்றோ ....என்று சிந்தித்தவாறே பேசத் தொடங்கி..... ராஜம்........ராஜம்........இந்த கேள்விக்கு நான் என்ன பதில் கூறுவேன். என்னு வெழவில்லையே....... இம்மாதிரி கேள்விகள் கேட்காதே........

ராஜம்:—ஐயா! அந்த காட்சியை இதோ இந்த பத்திரிகை எனக்குரைத்து விட்டது......ஐயா........அவரைத் தூக்கிலிட எத்தனை நாளிருக்கிறது...அந்த நாளையாவது தயவு செய்து தெரிவிக்க ...! நான் தங்களை என் பிதாவைப்போல் எண்ணி இருக்கி......இப்படித்தானு இருப்பது......அவரை என்று தூக்கி...ர்களோ, அதே சமயம் நானும் இங்கு தூக்குக் கயிற்றில் ...துவேன். இது சத்தியம்......தற்கொலை புரிவது பாபம்.......

1036-149

சட்ட விரோதம். எல்லாம் நானறிவேன்......ஆனால்......ஆனால்... என்னால் சகிக்க முடியாது...என்னால் உயிர் வாழ முடியாது...... அக்காரியத்தை நான் அதற்கு முன்பே செய்து விடலாம்......அந்த சங்கடமும் என் அன்பரின் செவியில் விழுந்து அந்த கஷ்டத்தையும் அனுபவிக்க வேண்டாம் என்றதனால் பொறுக்கிறேன். என்னைத் தாங்கள் கட்டுக்காவலில் வைக்க நினைப்பதாய்த் தெரிகிறது.என் சரீரத்திற்குத்தான் காவல். என் ஆத்மாவுக்கல்ல......இனி நான் யாரை வேண்டி உலகில் உயிர் வாழ வேண்டும்......நான் பிறந்த காரியம் முடிந்து விட்டது. என் வேலை யாகிவிட்டது. என்னைத் தாங்கள் தடை செய்தால் அந்த பாபம் தங்களை இலேசில் விடாது. தற்கொலை செய்து கொள்பவள் ஏன் தெரிவிக்க வேண்டும் என்று எண்ணலாம்......அது சகஜம்..

உண்மையான காதலுக்கு ஒரு உயிர் தியாகம் செய்தது என்பதை உலகத்தோர் அறியவேண்டும். அதோடு வீண்பழி பிறரைச் சேராதிருக்க வேண்டும். இவ் விரண்டிற்காக உங்களிடம் தெரிவித்து விட்டேன்.

ஏகாம்பரம் இடைமறுத்து ராஜத்தின் இரு கரங்களையும் பற்றிக் கொண்டு சமயோசித புத்தியுடன், "குழந்தாய்......ராஜம்... உன்னுடைய கரைகாணாத காதலின் வன்மையை நானறிவேன்....... நீ அவசரப்படாதே.......நேற்றுதான் மோஹனை நான் சந்தித்து ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யும்படிச் சொல்லி விட்டு வந்திருக்கிறேன். அந்த அப்பீலில் உன்னதிர்ஷ்டம் ஜெயமானாலும் ஆகும். அவசரப்பட்டு ஒன்றும் செய்து விடாதே......செல்வீ... ...உன்னிடம் என்னையறியாது இருக்கும் அன்பிற்குக் காரணமே தெரியவில்லை......என்னால் கூடிய வரையில் உனக்கு ஜெயம் பெறுவதற்கு முயற்சி செய்தேன். பலிக்கவில்லை. இன்னமும் கடைசிவரையில் செய்து பார்த்து விடுகிறேன். ராஜம்...ஒன்றும் செய்துவிடாதே.... என்று பரிதாபத்துடன் கூறினர்.

ராஜம் ஆத்திரத்துடன், "ஹா......ஐயா.......என் மோஹன் விடுதலையாகும் மார்க்கமும் ஏதாவது இருக்கிறதா? உண்மையாகவா!......உண்மையில் அவர் விடுதலையடைவதாயின்......நான் புனர் ஜென்மமெடுத்து உங்கள் வயிற்றில் பிறந்தவளாவேன்...... அன்பான ஐயா!......அன்னாளை எதிர் நோக்கி எத்தனை கஷ்டங்களையும் அனுபவித்துக் காத்திருக்கச் சித்தமாயிருக்கிறேன். அந்த பாக்யமில்லையேல்.......அவர் தூக்கிலிடும் நாளே எனக்கும் [illegible] நாள் என்பதை மறக்க வேண்டாம்.. ...இதை யார் தடுத்து[illegible] முடியாது." என்று அழுத்தமான குரலுடனும், விசனத்[illegible] கூறினள்.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, M[illegible]

விசேஷ அறிவிப்பு

நமது விளம்பர விகிதம்.

1 பக்கத்துக்கு ஒரு முறை	ரூ.	10	0	0
½ பக்கத்துக்கு ,,	,,	5	8	0
¼ பக்கத்துக்கு ,,	,,	3	0	0
கடைசி பக்க உள்ளட்டைக்கு ஒரு முறை	,,	10	0	0
முதற்பக்க உள்ளட்டைக்கு ,,	,,	12	0	0

விசேஷ விளம்பரங்கள்

சஞ்சிகையின் ஒவ்வொரு பக்கத்திலும் கதைக்குக் கீழ் 1 வரி விளம்பரச் செய்தி போட ஒரு முறை	ரூ.	0	8	0
ஒரே காலத்தில் 48 வரிகள் 1 சஞ்சிகையின் 1 வெளியீடு முழுவதிலும் போட ஒரு முறை	,,	20	0	0
கதை முடியும் அத்தியாயங்களின் இறுதியில் 1 பக்கத்தில் அநுமதிக்க ஒரு முறை	,,	15	0	0

நீண்ட கால விளம்பரங்களுக்கும், ஒப்பந்த விளம்பரங்களுக்கும் தனிச் சலுகை காட்டப்படும். ஸினிமா, இன்ஷியூரன்ஸ் போன்ற கம்பெனிகளுக்கு விசேஷ வசதிகளுடன் விளம்பரஞ் செய்வதோடு,முக்கியத்துவமும் பிரதான்யமும் கொடுக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு நேரே விளம்பர மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஞானமுள்ள பெற்றோர் தம் மக்களுக்குத் தேடும் சிறந்த ஆஸ்தி

சிறுவர் அறிவுக் கதிர்.

இரண்டாம் ஆண்டு.

பாலர் முதல் பெரியோர் வரை வாசித்து ஆனந்தம் அடையும் மாதப் பத்திரிகை. சிறுவர்கள் அறிவு விருத்திக்குத் தமிழ் நாட்டில் உலாவும் முதல் பத்திரிகை. கல்வித் துறையில் சிறந்த அநுபவம் உடையவர்கள் கட்டுரைகளைக் கொண்டது. மாதிரிக் காப்பிக்கு ஐந்து காலணு ஸ்டாம்பு அனுப்பவும்.

வருட சந்தா உள்நாடு 12 அணு. வெளி நாடு ரூ. 1—4—0

டிபாசிட் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

சிறுவர் அறிவுக் கதிர் ஆபீஸ், ஈரோடு, தென்னிந்தியா.

WANTED

...didates for Telegraph and Station Master class. ... Rs. 28. Uniform, passage and quarter free. ...ssential. Rules and Entrance form on annas ...rector, **Royal Telegraph and Ry. Duties ... Bombay 14.**

Read:—

CINE ART REVIEW

(A Film & Music Fortnightly De Luxe)
For Latest News and unbiassed Views.
Published every alternate Saturday.
Annual Subscription Rs. 2-0-0. Single copy Anna ONE only (Postage Extra)

படியுங்கள்:—

ஆடல் பாடல்

ஓர் சிறந்த சினிமா சங்கீத வாரப் பத்திரிகை.
சிறந்த கட்டுரைகள், அழகிய வர்ணப் படங்கள் கொண்டது.
வருட சந்தா ரூ 2-8-0 தனிப் பிரதி 0-0-6 (தபால் செலவு பிரத்தியேகம்)

Wanted Agents in unrepresented areas.
232, Wall Tax Road, Park Town, Madras.

"லக்ஷ்மி"

ஓர் உயரிய தமிழ் மாதப் பத்திரிகை.

எளிய நடையில் பல அரிய விஷயங்களுடன்
மாதம் ஒரு முறை வெளி வரும்.

பெண்களும், குழந்தைகளும் ஆவலுடன் வாசிக்கக் கூடிய சுவை பொருந்தியது.

உள் நாட்டுக்கு வருட சந்தா ரூ. 1 0 0
வெளி நாட்டுக்கு வருட சந்தா ரூ. 1 8 0

மானேஜர், "லக்ஷ்மி" ஆபீஸ், திருநெல்வேலி ஜங்ஷன்.

செங்குந்த மித்திரன்

ஓர் உயரிய மாதாந்த வெளியீடு

இதில் சமுதாய சீர்திருத்தம், அரசியல் அபிவிருத்தி, பொருளாதார முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், சுகாதாரம், வைத்தியம் பற்றிய குறிப்புகளும், அறிவு வளர்ச்சிக்கான பல உயரிய விஷயங்களும், மனதிற்கு இன்பமும் எழுச்சியும் தரத் தக்க கதைகள், நாவல்கள், உலக விநோதங்கள் ஆகியனவும் வெளியிடப்படுகின்றன.

ஆசிரியர்: பி. சே. மாணிக்கவாசகமுதலியார்

வருட சந்தா

உள்நாடு ரூ. 1-8-0 வெளிநாடு ரூ

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீ
பவழக்காரத் தெரு, சென்னை.

"வர்த்தக ஊழியன்"

வர்த்தக முன்னேற்றத்தைக் கருதி வெளிவரும் சிறந்த மாதப் பத்திரிகை

இந்தியா, இலங்கை, பினங்கு, சிங்கப்பூர் முதலிய நாடுகளி லுள்ள பிரபல வர்த்தகர்களாலும், மற்றும் பல பொது மக்களா லும் உலகத்தின் பல பாகங்களில் நிறுவப்பட்டிருக்கும் வர்த்தக சங்கங்களாலும் நன்கு ஆதரிக்கப்பட்டு, பிரதி ஆங்கில மாதம் முதல் வாரத்தில் பல ஆயிரக் கணக்கான இதழ்களுடன் வெளி வருவது.

வர்த்தக ஊழியனில்

வர்த்தகர்களுக்கு இன்றியமையாத கட்டுரைகள், சாமான் களுக்கு ரெயில்வே கட்டணங்கள், வர்த்தகத் துணுக்குகள், அன் னிய நாட்டு வர்த்தக விஷயங்கள், தொழில் அபிவிருத்தி, வர்த்த கக்குறி வழக்கு முதலிய பலபல விஷயங்கள் வெளிவரும். மதிப் புரைக்காக பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

வர்த்தக ஊழியனில்

விளம்பரம் செய்வதினால் தக்க லாபத்தை அடையலாமென் பது திண்ணம். குறைந்த செலவில் நிறைந்த லாபத்தையடைய விரும்பினால், வர்த்தக ஊழியனில் விளம்பரம் செய்யுங்கள்.

சந்தா உள் நாட்டிற்கு ரூ. 1. வெளி நாட்டிற்கு ரூ. 1-8-0

மானேஜர், "வர்த்தக ஊழியன்" திருச்சினப்பள்ளி.

நீங்கள் இதைப் படித்ததுண்டா?

குறைந்த சந்தா ! நிறைந்த செய்தி !

"சித்தன்"

ஓர் உயரிய மாதப் பத்திரிகை.

ஆசிரியர்: டாக்டர் C. P. சாமி.

இது கல்வி, கைத்தொழில், விவசாயம், வியாபாரம், சுகாதா ரம், வைத்தியம் முதலிய விஷயங்களையும், அறிவு வளர்ச்சிக்கேது வான பல கட்டுரைகளையும், இன்பக் கதைகள், உலக அதிசயங்கள், [illegible] ின், ஜீவிய சரிதைகள், செந்தமிழ்ப் பாக்கள், பெண் [illegible] தி, நாடகம், சினிமா இன்னும் பல அரிய விஷயங்கள் [illegible] வெளிவருகிறது.

சந்தா: உள் நாடு அணா 8. வெளி நாடு ரூ. 1.

மானேஜர், "சித்தன்" பழனி. S. I.

ஜகன்மோகினி கிடைக்கும் இடங்கள்

சென்னையில் தினமணி விற்கும் கடைகளிலும்,
சுதேசமித்திரன் புத்தகசாலை ரயில்வே ஸ்டால்களிலும்,
அடியிற் கண்டவர்களிடமும் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

புதுச்சேரி.
1. லக்ஷ்மணபிரசாத் கம்பெனி
2. ரா. நாராயணசாமி (தினமணி ஏஜண்டு)

மதுரை
V. சங்கரநாராயணன்

திண்டுக்கல்.
K. M. ராமசாமி (தினமணி ஏஜண்டு)

மாயவரம்.
ஷேக் ஊஸ்மான் சாகிப்
செட்டித் தெரு. சின்னத்தைக்கால்

கொடைவாசல்.
K. V. கோதண்டபாணி பிள்ளை
கடைத் தெரு.

ஈரோடு.
V. சௌந்தரராஜ[illegible]கார்
கெரோஸின் [illegible]
245. லார்டு [illegible] வீதி

வேலூர்.
D. K. ரா[illegible]சேஷய்யா

தூத்துக்குடி.
1. P. Samuel
Great Cotton Road
2. T. ரா[illegible]
காதி வஸ்திராலயம்

சிங்கப்பூர்
மகம்மத் தல்பகி கம்பெனி

குலாலம்பூர்
P. சிவகுரு
50. Brickfields Road

கோயமுத்தூர்
& International News Agency
Variety Hall Road

ஷண்முகநாதபுரம்
சொ. ராமநாதன்

காரைக்குடி.
T. K. சின்னப்பன்

கொழும்பு
A. R. சாமி.
191, நோரிஸ் ரோடு.

திருச்சி
The National Trading Co.
Teppakulam

புதுக்கோட்டை
P. V. சுப்ரமண்யம்

தஞ்சாவூர்
N. L. Iyer

கும்பகோணம்
1. K. S. நாராயணசாமி கம்பெனி
[illegible]த்துத் தெரு.
2. [illegible] வஸ்திராலயம்.

ரா[illegible]புரம்
R. N. [illegible]தராஜன்
ராம விலாஸ லைப்ரெரி.
சாம்[illegible]ன் ரீப்
K. C. [illegible] தாராம் பிரதர்ஸ்

கரூர்
K. V. செங்காபதி நாயுடு.

சேலம்.
காதி வஸ்திராலயம்

உதக மண்டலம்.
T. M. ஆரோக்யசாமி பிள்ளை.

Bombay
D. Chari & Co.
Matunga

ரங்கூன்
புவனகதா புக் டி[illegible]
229. Phayre S[illegible]

Kabeer Printing Works, Triplicane, Madras.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்.

27½ ரூபாய்க்கு 32 நாவல்கள்.

“ஜகன்மோகினி” சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

	ரூ.	அ.	ரூ.	அ.
வைதேகி (2 பாகங்கள்)	2	8	2	0
ராதாமணி	2	8	2	0
சாருலோசனை	2	8	2	0
பத்மசுந்தரன்	2	8	2	0
காதலின் கனி	2	8	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0	1	12
ருக்மிணீகாந்தன்	2	0	1	12
சாமளநாதன்	2	0	1	12
தியாகக்கொடி	2	0	1	12
மங்களபாரதி	2	0	1	12
சண்பகவிஜயம்	1	12	1	8
கௌரீமுகுந்தன்	1	12	1	8
ஸாரமதி	1	12	1	8
சோதனையின் கொடுமை	1	8	1	4
பரிமளகேசவன்	1	4	1	0
உத்தமசீலன்	1	4	1	0
இன்பஜோதி	1	4	1	0
சுகந்தபுஷ்பம்	1	0	0	14
கதம்பமாலை	1	0	0	14
கோபாலரத்னம்	0	14	0	12
புத்தியே புதையல்	0	14	0	12
பட்டமோ பட்டம்	0	10	0	8
நளினசேகரன்	0	8	0	6
வீரவஸந்தா	0	8	0	6
மூன்று வைரங்கள்	0	8	0	6
படாடோபத்தின் பரிபவம்	0	8	0	6
பிச்சைக்காரக் குடும்பம்	0	8	0	6
ஆனந்தஸாகர்	0	8	0	6
பக்ஷமாலிகா	0	6		
ஜயஸஞ்சீவி	0	4		
சுகுணபூஷணம்	0	4		
அம்ருததாரா	0	4		

ரூ. 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மொத்த [illegible] மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் [illegible]லவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

“ஜகன்மோகினி” ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

adras

Jaganmohini (Sep. 1936) Regd. No. M. 2210.

வலிகள்

சுளுக்குகள்

Strains

அனாவசியமாக வலியினால் அவஸ்தைப்படாதீர்கள். சம்பந்தப்பட்ட இடத்தில் அம்ருதாஞ்சனத்தை தேய்த்து, அதன் உஷ்ணம் நரம்புக்குள் நுழைந்து, வலியை சமனப்படுத்துவதை கவனியுங்கள்.

சீக்கிரத்தில் அநுகூலம் உண்டாக்குவதில் அம்ருதாஞ்சனத்திற்கு இணையானது வேறெதுவுமில்லை.

அம்ருதாஞ்சன்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும் சோஸ்தப்படுத்